விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 12 திங்கட்கிழமை (25.04.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 127

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# பகவான் சாய்பாபா ஜீவமுக்தி அடைந்தார்



(புட்டபர்த்தி)

**பகவான் ஸ்ரீ சத்யசாய் பாபா நேற்று ஜீவமுக்தி அடைந்தார். உலகம் முழுவதிலும் கோடிக்கணக்கான பக்தர்களை கொண்டிருந்த பகவானின் ஜீவாத்மா நேற்றுக் காலை 7.45 மணியளவில் இவ்வுலகை விட்டுப் பிரிந்தது.**

புட்டபர்த்தியில் பகவான் ஜீவமுக்தி அடைந்த செய்தி பரவியதும் உலகெங்கும் உள்ள சாய் பக்தர்கள் கண்ணீர் மல்கினர்.

கடந்த மார்ச் 28ஆம் திகதி உடல் நிலை பாதிக்கப்பட்டது. புட்டபர்த்தியிலுள்ள சத்ய சாய் உயர்கல்வி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பாபாவின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு வந்த போதிலும் கடந்த 18ஆம் திகதி இரவு பாபாவிற்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டிருந்தது.

சத்யசாய் மருத்துவமனை டாக்டர்களும் அரச மருத்துவர்களும் இணைந்து பாபாவின் உடல் நிலையை தீவிரமாக கண்காணித்து வந்தனர். இந் நிலையில் நேற்றுக்காலை 7.45 மணியளவில் அவரின் ஜீவாத்மா பிரிந்தது.

பாபாவின் உடல்நிலை மோசமடைந்து வருவதாக செய்தி பரவியதும் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் புட்டபர்த்திக்கு வந்து குவிந்தனர்.

பாபா விரைவில் குணமடைய வேண்டும் என உலகம் முழுவதும் பக்தர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். கடந்தவாரம், பாபாவின் உடல் நிலை பற்றிய உண்மை நிலையை தெரிவிக்க வேண்டும் என்று கேட்டு சிலர் புட்டபர்த்தியில் மறியலில் ஈடுபட்டனர். இதனால் ஆஸ்பத்திரி முன் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

இந் நிலையில், இரண்டு நாட்களுக்கு முன்பு பாபாவின் உடல் நிலை அபாய கட்டத்துக்கு சென்றது. இதனையடுத்து பக்தர்கள் புட்டபர்த்தி வர தடைவிதிக்கப்பட்டது. மாநிலம் முழுவதும் பொலிஸார் உசார் படுத்தப்பட்டனர்.

பாபாவின் மறைவுச் செய்தி கேட்டதும் பக்தர்கள் கதறியழுதனர். பாபாவின் உடலைப் பார்க்க அவர் சிகிச்சை பெற்ற மருத்துவமனையை நோக்கி அமைதியான முறையில் ஊர்வலமாக வந்தனர். அவர்களை பொலிஸார் அமைதிப்படுத்தி அனுப்பினர்.

சாய்பாபா உடல் பக்தர்கள் அஞ்சலி செலுத்துவதற்காக நேற்று மாலை 6 மணி முதல் புட்டபர்த்தியில் அவரது ஆசிரமத்திலுள்ள சாய் குல்வந்த் அரங்கில் வைக்கப்படுகிறது. திங்கள், செவ்வாய் ஆகிய 2 நாட்களும் பாபாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பக்தர்கள் யாரும் மருத்துவமனைக்கு வரவேண்டாம் என சத்ய சாய் அறக்கட்டளை சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

பாபாவுக்கு (02ஆம் பக்கம் பார்க்க)

## பகவானின் இறுதி நிகழ்வு புதன்கிழமை இடம்பெறும்

(புட்டபர்த்தி)

பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் திருவுடல் மக்களின் தரிசனத்திற்காக புட்டபர்த்தியிலுள்ள பிரசாந்தி நிலையத்தில் குல்வந்த் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது.

பகவானின் இறுதி நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை இடம்பெறும். பாபாவின் மறைவையொட்டி ஆந்திர அரசு நான்கு நாள் துக்கம் அனுஷ்டிக்கிறது. (ந-5)

## நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு எதிராக வெள்ளை அறிக்கை

## தயாரிப்புப் பணியில் இலங்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை தோற்கடிக்கும் வகையில் பாதுகாப்பு அமைச்சு வெள்ளை அறிக்கை ஒன்றை தயாரித்து வருகிறது.

படைத்துறை செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில் தயாரிக்கப்படும் இந்த அறிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கை குறித்து விளக்கம் அளிக்கப்படவுள்ளதாக தெரிய வருகிறது.

சட்டநிபுணர் கோமின் தயாசிறி தலைமையில் சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த மூத்த சட்ட நிபுணர்கள் குழுவொன்றிடம் இவ்வறிக்கையை தயாரிக்கும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சட்ட நிபுணர்கள் குழு தற்போது இந்த வெள்ளை அறிக்கையை தயாரிக்கும் முயற்சியில் தீவிரமாக செயற்பட்டு வருவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

நிபுணர் குழுவின் அறிக்கைக்கு பதிலாக அமையும் வகையில் தயாரிக்கப்படும் இவ் அறிக்கை, தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக படைத்தரப்பு மேற்கொண்ட நடவடிக்கைகள் (20ஆம் பக்கம் பார்க்க)

## பீரிஸ் நடத்திய சந்திப்பை புறக்கணித்தார் சீனத்தூதுவர்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கடந்த 21ஆம் திகதி வியாழக்கிழமை சர்வதேச தூதுவர்கள் மற்றும் ராஜதந்திரிகளுடன் நடத்திய கலந்துரையாடலில் இலங்கைக்கான சீனத்தூதுவர் ஜங் சுப்பிங் கலந்து கொள்ளவில்லை.

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பாக கொழும்பின் நிலைப்பாடு குறித்து சர்வதேச தூதுவர்கள் மற்றும் ராஜதந்திரிகளுக்கு விளக்கம் (20ஆம் பக்கம் பார்க்க)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# வாள் வெட்டு; கத்திக்குத்து

(யாழ்ப்பாணம்)

குடும்பத் தகராறு காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் வெட்டுக் காயங்களுக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் இரண்டு பெண்கள் உட்பட இளைஞர் ஒருவர் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் யாழ்.கொய்யாத்தோட்டம் புதுவீதியைச் சேர்ந்த இன்பநாதன் கபிரியயேற்பிள்ளை (வயது 59) என்பவரே வாள் வெட்டுக்கு இலக்கானவர்.

நேற்று இரவு 8மணியளவில் நடைபெற்ற இச் சம்பவத்தில் வீட்டினுள் நான்கு ஐந்து பேர் சென்று வெட்டியதாக வைத்தியசாலைப் பொலிஸாருக்கு அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை ஆனைக்கோட்டை வீதியில் சென்றுகொண்டிருந்தவர் மீது மதுபோதையில் வந்தவர் கத்தியால் குத்தியதில் அதே இடத்தைச் சேர்ந்த ஏ.தயாபரன் (வயது 28) என்பவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-5)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

# சத்திய சாய்பாபாவின் மறைவு

## முதல்வர் கருணாநிதி இரங்கல்

## ஜெயலலிதா ஆழ்ந்த கவலை

சத்ய சாய்பாபாவின் மறைவுக்கு தமிழக முதல்வர் கருணாநிதி இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக முதல்வர் கருணாநிதி நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

அன்பிற்கும் பாசத்திற்குமுரிய புட்டபர்த்தி சத்ய சாய்பாபா மறைந்துவிட்டார் என்ற செய்தி கேட்டுப் பெரிதும் துன்புறுகின்றேன். இறுதி அஞ்சலி செலுத்த துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்றுள்ளார். தமிழகத்திற்குத் தண்ணீர் வழங்கிட சில மாநில அரசுகளே மறுத்த நிலையில், நான் கேட்காமல் தானாகவே எனது இல்லத்திற்கு வருகை தந்து சென்னைக்கு குடிநீர் கிடைக்க ரூ.200 கோடிக்கு மேல் உதவிசெய்து, தமிழக மக்களின் உள்ளங்களில் எல்லாம் தக்கதொரு இடத்தைப் பிடித்துக் கொண்டவர் சத்ய சாய்பாபா.

நான் ஒரு நாத்திகவாதி என்ற போதிலும், சிறந்த ஆத்மிகவாதியான பாபா என்பால் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். 2007ஆம் ஆண்டு அவருக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி சென்னையில்நடைபெற்றது. அதில் அவரைப் பற்றி நான் பேசும் போது, "மக்கள் நலப் பணிக்காக அரசியல்வாதியும் ஆத்மிகவாதியும் ஒன்று சேர்வதில் தவறில்லை" என்றும் கூறினேன். இவ்வளவு விரைவில் அவர் நம்மையெல்லாம் விட்டு மறைந்துவிடுவார் என்று நான் நினைக்கவேயில்லை. அவரது மறைவால் வருந்தும் எண்ணற்ற அவரது சீடர்களின் துயரத்தில் நானும் பங்கேற்பதோடு, என்னுடைய தனிப்பட்ட ஆழ்ந்த இரங்கலையும் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

அ.தி.மு.க. செயலாளர் ஜெயலலிதா வெளியிட்ட இரங்கல் செய்தியில், அன்பையும் மனித நேயத்தையும் மக்கள் மத்தியில் வேரூன்றச் செய்ய தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர் சாய்பாபா. எண்ணற்ற இலவச கல்வி நிலையங்களையும் மருத்துவமனைகளையும் இன்னபிற மக்கள் பணியாற்றும் அமைப்புகளையும் உருவாக்கினார். கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக இந்திய மக்களுக்கும் உலகெங்கும் உள்ள ஏழை, எளியோர்க்கும் அரும்பணியாற்றியவர் சாய்பாபா. அவருடைய மறைவு மனித குலத்திற்குப் பேரிழப்பு. அவரை இழந்து வாடும் அவரது பக்தர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வாறு ஜெயலலிதா தெரிவித்துள்ளார். (ந-5)

# சாய்பாபாவின் அறக்கட்டளை ஆந்திர அரசு தலையிடாது

## முதல்வர் ரெட்டி அறிவிப்பு

ஸ்ரீ சத்ய சாய்பாபாவினால் ஏற்படுத்தப்பட்ட சத்ய சாய் மத்திய அறக்கட்டளை நிர்வாக விடயத்தில் அரசாங்கம் தலையிடமாட்டாது என ஆந்திர மாநில முதலமைச்சர் கிரண்குமார் ரெட்டி தெரிவித்துள்ளார்.

புட்டபர்த்தியில் சாய்பாபா நேற்று ஜீவமுக்தியடைந்த பின்னர் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றிலேயே ஆந்திர முதலமைச்சர் இவ்வாறு கூறினார்.

சத்யசாய் மத்திய அறக்கட்டளைக்கு இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் 40 ஆயிரம் கோடி இந்திய ரூபாய் பெறுமதியான சொத்துகள் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சத்யசாய் பாபாவுக்கு பின்னர் இந்த அறக்கட்டளையை நிர்வகிக்கப் போவது யார் என்ற கேள்வி எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந் நிலையில் சத்ய சாய்பாபா அறக்கட்டளை விடயத்தில் அரசு தலையிடாதென ஆந்திர முதலமைச்சர் கிரண்குமார் ரெட்டி அறிவித்துள்ளார். (ந-5)

# நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் பான் கீ மூனுடன் பேச பீரிஸ் முயற்சி



(கொழும்பு)

**வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனுடன் நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் கலந்துரையாட முயற்சிகளை மேற்கொண்டமை தெரிய வந்துள்ளது.**

இக்கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற ஏற்பாடாகி இருந்ததாகவும் இதனாலேயே நிபுணர்கள் குழுவின் அறிக்கையை பகிரங்கப்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டு வருவதாகவும் அறியக் கிடைக்கின்றது. நிபுணர்கள் குழுவின் அறிக்கை கடந்த 21ஆம் திகதி முழுமையாக வெளியிடப்படும் என ஐக்கிய நாடுகள் சபை முன்பு கூறியிருந்தது.

இந்நிலையில் நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தும் வரை இவ்வறிக்கையை பகிரங்கப்படுத்த வேண்டாமென பீரிஸ் விடுத்த கோரிக்கையை பான் கீ மூன் ஏற்றுக் கொண்டிருந்ததாகவும் தெரிய வருகின்றது.

ஆனால் இப் பேச்சுவார்த்தை இடம்பெற்றதா என்பது குறித்து இதுவரை தகவல்கள் எவையும் வெளிவராத நிலையில் நிபுணர்கள் குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்படுவதை தடுப்பதற்கான முயற்சிகளை பீரிஸ் தீவிரமாக மேற்கொண்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை நிபுணர்கள் குழுவின் அறிக்கை வெளிவருவதை எவராலும் தடுக்க முடியாது என ஐக்கிய நாடுகள் சபை தொடர்பான விவகாரங்களை ஆராயும் ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் மீது சர்வதேச மனிதவுரிமை அமைப்புகளும் மேற்கத்தைய நாடுகளும் பிரயோகித்து வரும் அழுத்தங்கள் இவ்வறிக்கையை பகிரங்கப்படுத்துவதற்கான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும் என இவர்கள் கூறுகின்றார்கள்.

இந்நிலையில் நிபுணர்கள் குழுவின் அறிக்கையை பகிரங்கப்படுத்துவதில்லை என பான் கீ மூன் உறுதி அளித்துள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் மூத்த தலைவர்களுக்கு அமைச்சர் பீரிஸ் கூறியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்ற போதிலும் இச்செய்தியை உறுதிப்படுத்த முடியவில்லை.

அதேவேளை பான் கீ மூன் ரஷ்ய விஜயத்தை முடித்துக் கொண்டு இன்று நியூயோர்க் திரும்பியதும் நிபுணர்கள் குழுவின் அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-5)

# பகவான் சாய்பாபா...

அஞ்சலி செலுத்த ஆந்திர கவர்னர் நரசிம்மன், முதல்வர் கிரண்குமார் ரெட்டி மற்றும் மத்திய, மாநில அமைச்சர்கள், கவர்னர்கள், மாநில முதல்வர்கள், முக்கிய பிரமுகர்கள், அரச அதிகாரிகள் உட்பட பலர் புட்டபர்த்திக்கு விரைந்த வண்ணம் உள்ளனர். பாபாவின் மறைவையடுத்து புட்டபர்த்தியில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பிரசாந்தி நிலையம் முன் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டனர். சுமார் 6 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சாய்பாபாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்த ஏராளமான முக்கியஸ்தர்கள் வருவார்கள் என்பதால், அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் ஆந்திர அரச அதிகாரிகள் செய்து வருகின்றனர். பாபாவின் மறைவுச் செய்தி கேட்டதும் உலகம் முழுவதிலுமுள்ள பக்தர்கள் ஆழ்ந்த சோகத்தில் மூழ்கியுள்ளனர். இறுதிச் சடங்குகளை ஆந்திர அரசு ஏற்பதாகத் தெரிவித்துள்ளது. புட்டபர்த்தியிலுள்ள ஜயவர் ஆச்சிரமத்தில் சாய்பாபாவின் உடலை சமாதி வைக்க ஏற்பாடு நடந்து வருகிறது.

ஆன்மீகத்துக்கு தன்னை அர்ப்பணித்த பாபா ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் 1926 ஆம் ஆண்டு, நவம்பர் 23ஆம் திகதி பெத்த வெங்கம ராஜு-ஈஸ்வரம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். பெற்றோர் இவருக்கு வைத்த பெயர் சத்யநாராயணராஜு. சிறு வயதிலேயே ஆன்மீகத்தால் ஈர்க்கப்பட்ட இவர், தன்னை முழுவதுமாக ஆன்மீகத்துக்கு அர்ப்பணித்துக் கொண்டார். ஷீர்டி பாபாவின் மறு அவதாரம்தான் சத்ய சாய்பாபா என்று கூறினார். அது முதல் அவர் பாபா என்றே அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டு வருகின்றார்.

ஆன்மீகம் மட்டுமன்றி நாடகம், நாட்டியம், இசை மற்றும் எழுத்திலும் அசாத்திய திறமை பெற்றிருந்தார் பாபா. ஏராளமான் கவிதை மற்றும் நாடகங்களை எழுதியுள்ளார். சமஸ்கிருதத்திலும் சிறந்த புலமை பெற்றிருந்தார். தனது அபார ஆன்மீக அறிவுத்திறனால் சிறு வயதிலேயே பெரும்புகழ் பெற்றார். உலகம் முழுவதும் ஏராளமானவர்களால் ஈர்க்கப்பட்டு ஆன்மீக குருவாகப் போற்றப்பட்டு வருகிறார்.

1940ஆம் ஆண்டு முதல் தென்னிந்தியாவில் ஆன்மீக பயணத்தை பாபா தொடங்கினார். 1968ஆம் ஆண்டு உகண்டாவுக்கும் அதன்பின் மற்ற வெளிநாடுகளுக்கும் பயணம் மேற்கொண்டு ஆன்மீகத்தை வளர்க்க அரும் பாடுபட்டார். முதன்முதலில் 1944ஆம் ஆண்டு இவரது சொந்த ஊரில் ஒரு கோயில் அமைக்கப்பட்டது. 1948ஆம் ஆண்டு பிரசாந்தி நிலையம் கட்டப்பட்டது. வெளிநாட்டு பக்தர்களிடம் இருந்து சாய்பாபா அறக்கட்டளைக்கு ஆண்டு தோறும் கோடிக்கணக்கான ரூபாய் நன்கொடையாக வரத்தொடங்கியது. அதன் மூலம் புட்டபர்த்தியில் மிகப்பெரிய மருத்துவமனை கட்டி ஏழை எளிய மக்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை அளித்தார் சாய்பாபா.

சென்னை, ஹைதராபாத், மும்பை ஆகிய இடங்களில் கோயில்களைக் கட்டிய பாபா, குடி நீர் பஞ்சம் அதிக முள்ள ராயல சீமாவின் அனந்த பூரில் 12 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் வசதியை ஏற்படுத்திக்கொடுத்தார். இத்திட்டம் இன்றளவும் வெற்றிகரமாகச் செயற்பட்டு மக்களின் தண்ணீர் பஞ்சத்தைப் போக்கிவருகிறது. மேலும் பெங்களூரில் பாபா அறக்கட்டளை சார்பில் அனைத்து நவீன வசதிகளுடன் மிகப்பெரிய மருத்துவமனை கட்டப்பட்டது. இங்கு உலகம் முழுவதிலு முள்ள ஏழை மக்களுக்கு இதய அறுவைச்சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கும் முற்றிலும் இலவச சிகிச்சை அளித்துவருவது குறிப்பிடத்தக்கது.

பெங்களூரில் செயற்பட்டு வரும் பாபா சமிதி மற்றும் அறக்கட்டளை கல்வி, மருத்துவம் உள்ளிட்ட ஏராளமான உதவிகளைச் செய்துவருகிறது. உலகம் முழுவதும் 114 நாடுகளில் 1200 சத்ய சாய்பாபா அறக்கட்டளைகள் உள்ளன. இவற்றின் மூலம் பள்ளிகள், கல்லூரிகள் உள்ளிட்ட பல கல்வி நிறுவனங்கள் செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

புட்டபர்த்தியில் சாய்பாபா அறக்கட்டளைக்குச் சொந்தமாக புகையிரத நிலையம், விமான நிலையம், விளையாட்டு அரங்கம் ஆகியவையும் உள்ளன. சாய்பாபா அறக்கட்டளை சொத்துகளின் மதிப்பு ரூ.40 ஆயிரம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. 1963ஆம் ஆண்டு முதன்முறையாக நோய்வாய்ப்பட்ட பாபா 4 முறை மாரடைப்பால் பாதிக்கப்பட்டு குண மடைந்தார். உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையிலும் அயராத ஆன்மீகப் பணியில் அவர் ஈடுபட்டு வந்தார். (ந-5)

**விற்பனையாளர் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் புடவை நிறுவனம் ஒன்றுக்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் தேவை.
மேலும் சிட்டை எழுதுநர் (பில் கிளார்க்- ஆண் வயது 30-50)
தொடர்பு :T.P.:2229286,0777488093
(4684)



டயலொக் வாடிக்கையாளர் சேவை நிலையத்தின் புத்தம்புதிய கிளை இப்போது சாவகச்சேரியில்

இல. 138, கண்டி வீதி,(A9) சாவகச்சேரிக்கு வருகை தந்து நாளைய எதிர்காலத்தை இன்றே அனுபவியுங்கள்.

Dialog



லங்கா LANKA

Hyrax CEYPETCO Lubricants

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட உராய்வு நீக்கி எண்ணை வகைகள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும்.



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
யாழ் ஏக விநியோகஸ்தர்
எஸ்.பி.என். மோட்டோர்ஸ்
48/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.


# பல் மருத்துவப் பறவை!




புளோவர் என்று ஒரு சிறுபறவை. இது முதலைகளின் பற்களைச் சுத்தம் செய்யும் வைத்தியராகப் பணியாற்றுகிறது.

முதலை, உயிரினங்கள் எல்லாவற்றையும் தின்னக்கூடியது. இரையின் எச்சங்கள் அதன் கோரமான பற்களிடையே சிக்கிக் கொண்டிருக்கும்.


முதலை அசைந்து வாயை மூடினால் போதும். பறவையின் உயிர் போய் விடும். ஆனாலும் முதலை அப்படிச் செய்வதில்லை. தன் பற்களை பறவை சுத்தம் செய்வதற்காக பொறுமையாகக் காத்திருக்கிறது. அதேநேரத்தில் பறவைக்கும் தாராளமாக உணவு கிடைத்து விடுகிறது.

இதேபோல் கடல் மீன்களைச் சுத்தப்படுத்தும் ஒருவகை மீன் உள்ளது. அவை ஒரு கோஷ்டியாக இருக்கும். மீன்கள் தம் உடலைச் சுத்தப்படுத்த இவற்றிடம் வருகின்றன. அவற்றின் உடம்பில் உள்ள ஒட்டுண்ணிகள், காளான், பக்டீரியா போன்றவற்றை *சுத்தப்படுத்தும் மீன்கள்* சாப்பிட்டு சுத்தப்படுத்துகின்றன. இவற்றின்வேலை முடியும் வரை பெரிய மீன்கள் பொறுமையாக ஒத்துழைக்கின்றன. சுறாமீன்கள் கூட இவ்வாறு தமது உடலைச் சுத்தம் செய்துகொள்கின்றன.

# மண்ணுலகில் நடமாடிய தெய்வம் சத்ய சாய்பாபா



பாபாவின் திருவுடலை தரிசிக்க அலைமோதும் பக்தர் கூட்டம்




திருவுடல் வைக்கப்பட்டுள்ள பேழை

இறுதித் தரிசனம்



இந்தியத் தலைவர்கள் மற்றும் பிரமுகர்களுடன் சத்ய சாய்பாபா



# இன்று ஒரு தகவல்

## ராணி புகட்டிய ஞானம்

ஓர் ஊரில் ஓர் ராஜா இருந்தார். அந்த ராஜாவுக்கு ஒரு ராணி. அவர்களின் அரண்மனைக்குப் பெரிய பெரிய ஞானிக்ளெல்லாம் வருவது வழக்கம். அந்த ஞானிகளின் உபதேசங்களையெல்லாம் ராணி தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தாள். அதன் விளைவாக அவளும் ஒரு ஞானியாகி விட்டாள்.

அது மட்டுமன்றி தன் உருவத்தை மாற்றிக் கொண்டு ஆகாயத்தில் பறக்கும் சித்தியும் அவளுக்குக் கிடைத்தது. நினைத்தால் பறக்கலாம்.... அப்படிப்பட்ட சக்தி அவளுக்கு வந்து விட்டது. ராஜா உடனே ராணியிடம் பேசினார்.

''இதோ பார்.! நானும் உன்னைப்போல் ஒரு ஞானியாக வேண்டும். எனக்கு ஏதாவது உபதேசம் செய்யேன் என்று கேட்டுக் கொண்டார். அதற்கு ராணி, ''நீங்கள் ஞானியாக வேண்டுமானால் எல்லாவற்றையும் துறப்பதற்கு தயாராக இருக்க வேண்டும். எல்லாவற்றையும் விட்டுவிடும் அளவுக்கு இன்னும் உங்களுக்கு வைராக்கியம் வரவில்லை'' என்று சொல்லி விட்டாள்.

சரி என்று பேசாமல் இருந்து விட்டார் ராஜா. கொஞ்சக்காலம் ஆயிற்று. அந்த ராஜா காட்டுக்குச் சென்று தவம் பழக வேண்டும் என்று விரும்பினார். நேராக ராஜாவுக்கு முன்னால் போய் இறங்கினார் அந்த இளம் முனிவர்- அதுதான் ராணி. ராஜா இளம் முனிவரைப் பார்த்து வணங்கினார்.

''நான் நீண்ட காலமாகத் தவம் செய்து வருகிறேன். ஆனால், மனநிம்மதி எனக்கு இன்னும் கிடைக்கவில்லை. தாங்கள் தான் அருள்புரிய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு அந்த இளம் முனிவர் எல்லாவற்றையும் துறக்க வேண்டும் என்று உங்கள் மனைவி ஒரு சமயம் உங்களுக்கு உபதேசதம் செய்தாளே! அதன்படி எல்லாவற்றையும் விட்டு விட்டீர்களா?'' என்று கேட்டார்.

''எல்லாவற்றையும் விட்டுவிட்டேன். இன்னும் இந்த ஆச்சிரமத்தைத்தான் துறக்கவில்லை!'' என்று சொல்லிக் கொண்டே அந்த ராஜா ஆச்சிரமத்தில் இருந்த ஒவ்வொரு பொருளாக எடுத்து அக்கினியில் போட்டார். ''இப்போது நீங்கள் போடுகிறீர்களே... இந்தப் பொருட்களெல்லாம் உங்களுக்குச் சொந்தமில்லையே. இவையெல்லாம் பிரகிருத்திக்கு (இயற்கைக்கு) அல்லவா சொந்தம்?'' என்று இளம் முனிவர் வினவினார்.

சரி, அப்படியானால் எனது உடம்பை நான் துறக்கிறேன் என்றார் ராஜா. இப்படிச் சொல்லிவிட்டு நெருப் பில் குதிக்கப் போனார்.

உடனே இளம் முனிவர் ராஜாவைத் தடுத்து நிறுத்தி ''உடம்பும் உங்களுக்குச் சொந்தம் இல்லையே! அதெல்லாம் பஞ்சபூதங்களுக்கு அல்லவா சொந்தம்!'' என்று கேட்டார்.

ராஜா யோசித்தார். ''அப்படியானால் எனக்கு என்னதான் சொந்தம்?'' என்று கேட்டார்.

''உங்களது அகங்காரம்தான் உங்களுக்குச் சொந்தம். நீங்கள் துறக்கவேண்டியதும் அதுதான். முதலில் அதை விடுங்கள்!அது உங்களிடம் இருப்பதால் இந்த உலகமே உங்களிடம் இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள். அகங்காரம் இருப்பதனால்தான் இந்த உலகப் பொருட்கள் உங்களுக்குச் சொந்தம் என்று உங்களுக்குத் தோன்றுகிறது!'' என்று இளம் முனிவர் உருவில் இருந்த ராணி சொன்னாள்.

உடனே ராஜா இதோ என்னிடமிருக்கும் அகங்காரத்தை விட்டு விட்டேன் என்றார் ராஜா. அதன் பிறகுதான் அந்த ராஜாவும் ஞானியானார். ராணிக்குக் கிடைத்தது போன்ற சித்தியும் அவருக்குக் கிடைத்தது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# புதிய கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையால் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமா (NDICT) கற்கை நெறி மிக விரைவில் ஆரம்பமாக வுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு NCICT, NVQ,ICT சான்றிதழ் பெற்றோர் ஒருவருடத்திற்கு மேற்பட்ட கணனிப்பயிற்சியொன்றை தனியார் துறையில் பயின்றவர்கள் விண்ணப்பிக்கமுடியும்.

இதற்கு தகுதியான விண்ணப்பதாரிகள் கல்வித்தகைமையுடன் கூடிய சுயமுகவரியிடப்பட்ட சுய விவரக்கோவையைப் பூர்த்தி செய்து அனுப்பி வைக்கவேண்டும்.

விண்ணப்பதாரிகள் நேர் முகப் பரீட்சைமூலம் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். விண்ணப்பப்படிவங்கள்யாவும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, இல375, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு மாவட்ட இணைப்பாளர் இரா. அகிலன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வித்தகபுரம் மக்களுக்கான கலந்துரையாடல்

வித்தகபுரம் மக்களுக்கு வீடமைப்பு அதிகாரசபையின் கடன் திட்டத்துடன் மானியமும் வழங்கல் சம்பந்தமான கலந்துரையாடல் வித்தகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கிராமசேவகர் அலுவலகத்தில் நடைபெறும்.

இதில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# கட்டுரைப் போட்டி முடிவுகள்

(மருதங்கேணி)

அகில கலை இலக்கிய சங்கத்தின் நாடகக் கலைஞர் கந்தையா வடிவேலு ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டிகளின் முடிவுகள் அறவிக்கப்பட்டுள்ளன.

இதில் முதலாமிடத்தை எஸ்.சுந்தரலிங்கம் (கொழும்பு), இரண்டாமிடத்தை புலவர்.எஸ்.பரமநாதன் (கொக்குவில்), மூன்றாமிடத்தை எஸ்.சேயோன் (யாழ்ப்பாணம்) ஆகியோர் பெற்றுக் கொண்டுள்ளனர்.

**வெற்றிச் சான்றிதழ் பெறுவோர் விபரம்:-** த.பரமலிங்கம் (வண்ணார்பண்ணை, வடமேற்கு), இ.திருத்துவராஜா (அல்வாய்),யே.ஜெனற்நிஷானி (நெடுந்தீவு),சி.அல்லையம்பதி (கரவெட்டி), மு.றினோஸா பர்வின் (கிண்ணியா), எஸ்.சோபிகா (கோண்டாவில் வடக்கு), ம.இந்துஜா (அச்சுவேலி தெற்கு),ந.கார்த்திகா (யாழ்ப்பாணம்), திருமதி.வ. சிவநாயகி( திருநெல்வேலி), ர.சிவானியா(நாவலப்பிட்டி) இவர்களுக்கான பரிசுகள் அடுத்தமாதம் நடைபெறும் கலை இலக்கிய விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளது. (ஸ்ரீ-3-35)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 90 |
| தக்காளி | 40 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 55 | 50 | 60 |
| கோவா | 60 | 50 | 80 |
| கரட் | 120 | 70 | 130 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 35 | 30 | 30 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 150 | 150 |
| பெரிய வெங்காயம் | 55 | 80 | 70 |
| பாகற்காய் | 60 | 100 | 130 |
| வெண்டிக்காய் | 30 | 30 | 40 |
| கருணைக் கிழங்கு | - | 80 | -- |
| பயற்றங்காய் | 40 | 30 | 60 |
| லீக்ஸ் | 60 | 80 | 70 |
| பீற்றூட் | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 110 | 60 | 130 |
| முருங்கைக்காய் | 500 | 300 | 500 |
| போஞ்சி | 60 | 100 | -- |
| கத்தரிதம்புள்ள | - | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 18 | 20 | 20 |
| தேசிக்காய் | 120 | 80 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 50 |

# பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி.செ.சுந்தரேசன் தலைமையில் நடை பெற வுள்ளது. (ஸ்ரீ-3-51)

# இராசி பலன்

*25.04.2011*
*(சித்திரை 12 ,திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு*
*அட்டமி பின்னிரவு 1.18 மணிவரை*
*உத்தராடம் முற்பகல் 11.28 மணிவரை*
*இராகுகாலம் 7.30-9.00 மணிவரை*
*சுபநேரம் 12.00-1.30 மணிவரை*
*நடேசர் அபிஷேகம்*

**மேடம்** யோகமான நாள், எதிர்பாராமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள், தொழில் ரீதியாக புதிய திட்டங்களை வகுப்பீர்கள், வீட்டுத் தேவைளை நிறைவு செய்து கொள்வீர்கள்.

**இடபம்** தடைப்பட்ட காரியங்கள் தானாகவே நடைபெறும், சொத்துக்கள் தொடர்பான விடயங்கள் கைகூடலாம், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.

**மிதுனம்** எந்தக் காரியத்தையும் நிதானமாகச் செய்வது நல்லது, தொழிலில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வதன் மூலம் அனுகூலம் ஏற்படும், உடல் நலன்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டிய நாள்.

**கடகம்** கல்யாணக் கனவுகள் நனவாகலாம்,நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நட்பு கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, உற்சாகமான நாள்.

**சிங்கம்** பெண்களால் பெருமை வந்து சேரும் நாள், தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தமடைவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** மனநிறைவு கூடும் நாள், தொலைபேசி வழியில் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், பிள்ளைகளால் பெருமை சேரலாம், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்** இனிய செய்திகள் வந்து சேரலாம், வாகனத்தை பழுதுபார்க்கும் எண்ணம் மேலோங்கும், பெற்றோர் மீது பாசம் அதிகரிக்கும், தெய்வசிந்தையில் நாட்டம் கூடும்.

**விருச்சிகம்** பயணங்களால் பலன் கிடைக்கும், ஆடை ஆபரணச் சேர்க்கையுண்டு, பொதுவாழ்வில் புகழ் கூடும், சேமிப்பை உயர்த்துவதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள்.

**தனுசு** நாவன்மையால் நல்ல பெயரெடுக்கும் நாள், உத்தியோகத்தால் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும், கொடுக்கல், வாங்கல்கள் ஒழுங்காகும், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**மகரம்** பாராட்டும் புகழும் அதிகரிக்கும், ஆற்றல் மிக்கவர்களின் சந்திப்பால் நல்ல செயலொன்றைச் செய்வீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும், சிந்தனை மிகுதியுண்டு.

**கும்பம்** சாப்பிடக்கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்யவேண்டி ஏற்படலாம், மாலை நேரப் பயணம் மகிழ்ச்சியைத் தரும், வெளியுலகத் தொடர்புகள் விரிவடையலாம்.

**மீனம்** பணவரவு அதிகரிக்கும், விருப்பங்கள் நிறைவேறலாம், உறவினர்களுடன் கலந்துரையாடி மகிழ்வீர்கள், பொருட்சேர்கையுண்டு, கௌரவமான நாள்.

வளவன்

# மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற உதவும் சமுர்த்தித் திட்டங்கள்

## யாழ்.மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் தெரிவிப்பு



(காரைநகர்)

யாழ். மாவட்டத்தில் உள்ள 31 சமுர்த்தி வங்கிகளில் காரைநகர் சமுர்த்தி வங்கி தமக்கென அடையாளப்படுத்தக்கூடிய சிறப்பிடத்தை பிடித்துள்ளமை பெருமை தந்துள்ளதென யாழ். மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் அ.ரகுநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலத்தில் நடைபெற்ற சமுர்த்தி வங்கியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

யாழ். மாவட்டத்தில் வழங்கப்பட்டுவரும் சமுர்த்தி நன்மைகள் இலை மறைகாயாகவே உள்ளன. இவற்றினை வெளிப்படுத்தி மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும்.

இன்று யாழ். மாவட்டத்தில் 31 சமுர்த்தி வங்கிகள் இயங்குகின்றன. இவற்றுள் காரைநகர் சமுர்த்தி வங்கி தமக்கென்று தனி அடையாளப்படுத்தக்கூடியளவு திறமையாக செயற்பட்டு வருகிறது.

காரைநகர் பிரதேச செயலக விளையாட்டு விழாவிலும் பல மடங்கு பொது மக்களுடன் இப்போட்டிகள் நடைபெற்றுள்ளன. ஆகவே சமுர்த்தி திட்டங்கள், நன்மைகள் மக்கள் மனதில் ஊடுருவியுள்ளதையே எடுத்துக் காட்டுகின்து.

சமுர்த்தி திட்டத்தினூடாக நாட்டின் அபிவிருத்தி நோக்கி மாபெரும் சமுர்த்தி படையணி பயணித்துக் கொண்டிருக்கின்றது.

அதேநேரம் பயனாளிகளின் கூட்டுக் குடும்ப தன்மை நாட்டின் சகோதர சமத்துவத்தினை கட்டிக்காப்பவையாக அமைந்துள்ளது. இவ்வொற்றுமைத் தன்மை காரைநகரில் பெரிதும் காணப்படுகின்றது.

பன்முகப் பார்வை கொண்ட சமுர்த்தி திட்டத்தினை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு பாடுபட்ட காரைநகர் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். இன்று நடைபெற்ற பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளினூடாக எமது பயனாளிகள் உடல்,உள ஆரோக்கியத்தினை பெற்று வாழ்வாதார ரீதியில் முன்னேற்றமடைய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

சமுர்த்தி வங்கி முகாமையாளர் தி.சசிக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட செயலக சமுர்த்தி இணைப்பாளர் அ.ரகுநாதன், கௌரவ விருந்தினராக காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் க.சோமசேகரம், சிறப்பு விருந்தினர்களாக கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலய அதிபர் பொ.சிவானந்தராசா, யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் க.சோமசேகரம், காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை ஆளனி உதவியாளர் திருமதி.அ.விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஸ்ரீ-3-246)

## கிளைக்குழுத் தெரிவு

(அல்வாய்)

புலோலி பல நோக்குக்கூட்டுறவுச் சங்க கிளைக்குழு தெரிவுகள் எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 10 மணிக்கு அவ்வவ் கிளைக்கென குறிப்பிட்ட இடங்களில் யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவியாணையாளரால் நியமிக்கப்பட்ட கூட்டுறவு உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறவுள்ளது.

வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்கள் தமது கிளைக்குழு தெரிவில் பங்கு கொண்டு ஒத்துழைக்குமாறு புலோலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-3-19)

## கௌரவிப்பு நிகழ்வு

(சாவகச்சேரி)

இளைஞர் பரிமாற்றுத் திட்டத்தின் கீழ் மாத்தறை பிரதேசத்திலிருந்து சாவகச்சேரி பிரதேசத்திற்கு வருகை தந்திருக்கும் இளைஞர் சேவைமன்ற பிரதிநிதிகளை கௌரவிக்கும் நிகழ்வு மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ரி.விமலதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினராக மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பணிப்பாளர் நாயகம் லலித் பியூம் பெரேரா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக மறவன் புலோ சகலகலாவல்லி வித்தியாலய அதிபர் வை.ஜெயகாந்தன், யாழ். மாவட்ட தேசிய சர்வமத சமாதான பேரவை இணைப்பாளர் ஜே.தர்மராஜா, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பணிப்பாளர் சபை உறுப்பினர் தே.அன்றோ டினேஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-3-29)

## பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது

(கரவெட்டி)

வடமராட்சியில் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் நேற்று அல்வாய் கிழக்கு அத்தாய் பகுதியில் வைத்து நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவதினம் அதிகாலை 1.30 மணிக்கு குறித்த சந்தேக நபர் அப்பகுதியில் உள்ள சனசமூக நிலையமொன்றில் தங்கியிருந்த வேளை இளைஞர் ஒருவரால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

குறித்த சந்தேக நபரை அப்பகுதி மக்கள் நையப்புடைத்து விசாரித்த போது,




தான் பல கொள்ளைச் சம்பவங்களுக்கு பகல் வேளைகளில் வேவு பார்த்து கொள்ளையர்களுக்கு தகவல் வழங்குவதாக தெரிவித்தார்.பின் அவர் நெல்லியடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதேவேளை குறித்த நபரை பிடித்த இளைஞரும் பின் நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்விளைஞர் சில வருடங்களுக்கு முன் சண்டை வழக்கொன்றில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு பொலிஸாரினால் தேடப்பட்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-3-24)

## கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் அல்லைப்பிட்டியில் 70 வீடுகள் நிர்மாணம்

### அடுத்த வாரம் மக்களிடம் கையளிப்பு

(கொழும்புத்துறை)

அல்லைப்பிட்டி வெண்புறவி நகரில் 70 வீடுகள் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

மேற்படி வீடுகளை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 10 மணிக்கு கியூடெக் கரித்தாஸ் இயக்குநர் அருட்தந்தை யோ.செ.பேனாட் றெக்னோ தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்து கொண்டு வீடுகளை அல்லைப்பிட்டி மக்களிடம் சம்பிரதாய பூர்வமாக கையளிக்கவுள்ளார்.

குருநகர் பகுதியில் மக்கள் நெரிசலை குறைக்கும் நோக்கில் யாழ். மறை மாவட்ட கடற்தொழிலக மேம்பாட்டு மையத்தின் (நெய்தளம்) இயக்குநர் அருட்கலாநிதி அ.பி.ஜெயசேரகம் அடிகளாரின் முயற்சியில் அரச காணி குருநகர் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இதற்கமைய சுமார் 200 குடும்பங்களை அல்லைப்பிட்டி வெண்புறவி மாதிரி கிராமத்தில் மீள் குடியேற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதில் 70 குடும்பங்களுக்கான வீடுகளை கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் அமைத்துக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-3-51)


## முகாமைத்துவ போட்டியில் கரவெட்டி பிரதேச செயலகம் முதலிடம்

(கரவெட்டி)


பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சினால் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட முகாமைத்துவ போட்டியில் கரவெட்டி பிரதேச செயலகம் முதலிடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

பிரதேச செயலகங்களுக்கிடையில் ஆண்டுதோறும் இடம்பெற்று வரும் 2010 ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவப் போட்டியில் யாழ். மாவட்டத்தில் 15 பிரதேச செயலகங்கள் பங்குபற்றியிருந்தன.

இப்போட்டியில் கரவெட்டி பிரதேச செயலகம் முதலாமிடத்தையும் சங்கானைப் பிரதேச செயலகம் இரண்டாமிடத்தையும் தெல்லிப்பழை பிரதேச செயலகம் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-24)


தமிழ் -சிங்கள புத்தாண்டையொட்டி யாழ்ப்பாணச் சிறைச்சாலை கைதிகளுக்கான விளையாட்டுப் போட்டி நேற்று சிறைச்சாலை வளாகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் யாழ்ப்பாண சிறைச்சாலை நலன்புரிச் சங்கத் தலைவர் வி. சுசிதரன் உரையாற்றுவதையும் கைதிகளுக்கான விளையாட்டுப் போட்டி இடம்பெறுவதையும் ஏனைய கைதிகள் ஆரவாரத்துடன் விளையாட்டுப் போட்டியை கண்டுகளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்-எஸ்.கரன்)







யாழ். மாவட்ட பொருளாதார மேம்பாட்டிலும் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதிலும் வங்கித்துறையின் பங்கு என்னும் கருப்பொருளினாலான சிறப்பு ஆய்வரங்கம் ஒன்று சொண்ட் நிறுவன அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சொண்ட் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் ச. செந்துராசா தலைமையுரையாற்றுவதையும் இலங்கை மத்திய வங்கி வடமாகாண முகாமையாளர் டு.சிறிதரன் ஆய்வுரை நிகழ்த்துவதையும் ஆய்வரங்கில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## பான் கீ மூனின் அறிக்கை மீண்டும் பயங்கரவாதத்துக்கு வித்திடும்

### கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் அறிக்கை நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க வித்திடும் என கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

திருகோணமலை கோமரங்கடவெல பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வைத்தியசாலை திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய கிழக்கு மாகாண ஆளுநர், பான் கீ மூனின் அறிக்கை நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையை அனுபவிக்க முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் நாடு மீண்டும் முன்னைய நிலைக்கு தள்ளப்படும். மீண்டும் நாட்டில் பயங்கரவாதம் தலைதூக்க இது வித்திடும் என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரம, புத்தசாசன பிரதியமைச்சர் குணவர்த்தன, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் சுபைர், திருகோணமலை அரசாங்க அதிபர், சுகாதார திணைக்கள உயர். அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)

## இணைய குற்றச் செயல்களை தடுப்பது குறித்து தெற்காசிய நாடுகள் பேச்சு

இணையம்ஊடாக மற்றும்கணனி மூலம் மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவது குறித்து தெற்காசிய பிராந்திய வலய நாடுகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளன.

இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தினால் இணைய குற்றச் செயல்களை தடுப்பது தொடர்பிலான விசேட கருத்தரங்கொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

கொழும்பில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில் தெற்காசிய பிராந்திய வலய நாடுகளைச்சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இணைய குற்றச் செயல்களை தடுத்து நிறுத்துவதற்கு ஏனைய உறுப்பு நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளல், தடுப்பு வழிமுறைகளை அறிமுகப்படுத்தல், புதிய சட்டங்களை உருவாக்குதல், உள்ளிட்ட விடயங்கள் இந்தக் கருத்தரங்கில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

சர்வதேசதூரத்தில் இணைய குற்றச் செயல்களை முறியடிப்பதற்கான முனைப்புகள் எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## தொலைபேசி குறுந்தகவல்மூலம் பொலிஸ் முறைப்பாடுகள்

### விரைவில் அறிமுகம்

(கொழும்பு)

தொலைபேசி குறுந்தகவல் மூலம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கூடிய வசதி விரைவில் அறிமுகப் படுத்தப்படவுள்ளது.

பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவின் வழிகாட்டல்களின் அடிப்படையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தொலைபேசி மூலம் குறுந்தகவல்களை அனுப்பி பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை செய்யக் கூடிய வசதி அடுத்த மாதமளவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

மிகவும் துரித கதியில் முறைப்பாடுகளை செய்வதற்கு இந்த முறைமை உதவும் என எதிர்பார்ப்பதாக பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறெனினும் மக்கள் போலியான முறைப்பாடுகளை செய்யக் கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறு போலியான முறைப்பாடுகளை மேற்கொள்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## 2011.04 25 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1607- எண்பதாண்டுப் போர்: கிப்ரால்ட்டரில் டச்சுக் கடற்படையினர் ஸ்பானிய கடற்படைக் கப்பலைத் தாக்கி அழித்தனர்.

★1829- மேற்கு அவுஸ்திரேலியாவில் சார்ள்ஸ் ஃபிரெமாண்டில் சலேஞ்சர் என்ற கப்பலில் வந்து தரையிறங்கி சுவான் ஆற்று குடியேற்றத்தை ஆரம்பித்தார்.

★1861- அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டணிப் படைகள் வோஷிங்டன் டிசியை அடைந்தன.

★1862- அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டணிப் படைகள் டேவிட் பராகுட் தலைமையில் லூசியானாவின் நியூ ஓர்லென்ஸ் நகரை கூட்டமைப்பினரிடம் இருந்து கைப்பற்றின.

★1864- அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஆர்கன்சஸ் மாநிலத்தில் இடம்பெற்ற போரில் கூட்டமைப்பினர் பெரும் வெற்றி பெற்றனர்.

★1898- ஐக்கிய அமெரிக்கா ஸ்பெயின் மீது போரை அறிவித்தது.

★1915- முதலாம் உலகப் போர்: அவுஸ்திரேலியா, பிரித்தானியா, நியூசிலாந்து மற்றும் பிரெஞ்சுப் படைகள் துருக்கியின் கலிப்பொலியை முற்றுகையிட்டன.

★1916- அயர்லாந்தில் இராணுவச் சட்டத்தை ஐக்கிய இராச்சியம் பிறப்பித்தது.

★1916- அன்சாக் நாள் முதற் தடவையாக நினைவு கூரப்பட்டது.

★1945- நாசி ஆக்கிரமிப்பு இராணுவம் வடக்கு இத்தாலியில் இருந்து விலகியது.

★1961-ரொபர்ட் நொய்ஸ் ஒருங்கிணைந்த மின்சுற்றுக்கான (integrated circuit) காப்புரிமத்தைப் பெற்றார்.

★1966- தாஷ்கெண்ட் நகரத்தின் பெரும் பகுதி நிலநடுக்கத்தால் அழிந்தது. 300,000 பேர் வீடுகளை இழந்தனர்.

★1974- போர்த்துக்கலில் 40 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி செய்த பாசிச அரசு கவிழ்க்கப்பட்டு மக்களாட்சி ஏற்படுத்தப்பட்டது.

★1982- காம்ப் டேவிட் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இஸ்ரேலியப் படைகள் முழுவதுமாக சினாய் தீபகற்பத்தில் இருந்து வெளியேறியது.

★1983- பயனியர் 10 விண்கலம் புளூட்டோ கிரகத்தின் சுற்றுப் பாதையைத் தாண்டிச் சென்றது.

★1983- ஹிட்லரால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் ஹிட்லரின் நாட் குறிப்புக்கள் நூலின் முதல் பகுதியை ஜேர்மனியின் ஸ்டேர்ன் இதழ் வெளியிட்டது.

★1986- சுவிற்ஸர்லாந்தின் மன்னனாக மூன்றாம் முசுவாட்டி முடிசூடினார்.

★1988- இரண்டாம் உலகப் போரில் இழைத்த குற்றங்களுக்காக ஜோன் டெம்ஜானுக் என்பவருக்கு இஸ்ரேல் மரண தண்டனை விதித்தது.

★2005- இத்தாலிய ஆக்கிரமிப்பாளர்களால் 1937 இல் களவாடப்பட்ட 1700 ஆண்டுகள் பழமையான சதுர நினைவுத் தூபியின் கடைசித் துண்டு எதியோப்பியாவுக்கு கொண்டு வரப்பட்டது.

★2005- ஜப்பானில் தொடரூந்து விபத்தில் 107 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★1599- ஒலிவர் குரொம்வெல், இங்கிலாந்தில் முடியாட்சியை நீக்கியவர் (இ.1658)

★1840- பியோத்தர் சாய்க்கோவ்ஸ்கி, ரஷ்ய இசையமைப்பாளர் (இ.1893)

★1874- மார்க்கோனி, வானொலியைக் கண்டுபிடித்தவர். (இ.1937)

★1906- புதுமைப்பித்தன், நவீன தமிழ் இலக்கியத்தின் ஒரு முன்னோடி (இ.1948)

★1940- அல் பசீனோ, அமெரிக்கத் திரைப்பட நடிகர்

★1976- டிம் டங்கன், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### சிறப்பு நாள்

★அவுஸ்திரேலியா, நியூசிலாந்து- ஆன்சாக் நாள்

★போர்த்துக்கல் விடுதலை நாள் (1974)

★இத்தாலி-நாசிகளிடம் இருந்து விடுதலை (1945)

# நிபுணர் குழு அறிக்கையை இலங்கை இந்தியாவிற்கு அனுப்பி வைத்துள்ளது

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கையை இலங்கை அரசாங்கம் இந்தியாவிற்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்த அறிக்கை தொடர்பில் இந்தியா விடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளும் நோக்கில் இலங்கை அரசாங்கம் இந்த அறிக்கையை அனுப்பிவைத்துள்ளது. இதே வேளை நிபுணர் குழவின் அறிக்கை தொடர்பில் ஆராய்வதற்காக பாதுகாப்புச் ஆலோசகர் ஷிவ்சங்கர் மேனன் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினை இந்திய அரசாங்கம் நியமித்துள்ளதாக இராஜதந்திர வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின் றன.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு இடையில் நிபுணர்குழு அறிக்கை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.


சில தினங்களுக்கு முன்னர் இந்த அறிக் கையின் உள்ளடக்கம் தொடர்பில் தொலைபேசிமூலம் இரு நாட்டுத்தலைவர்களும் பேசியதாகவும் அதன்பின்னர் இந்தியா ஷிவ்சங்கர் மேனன் தலைமையிலான குழுவினை நியமித்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

அறிக்கையை உன்னிப்பாக ஆராயப்பட்டதன் பின்னர் தேவையானஉதவிகளைவழங்கநடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய இராஜ தந்திரியொருவர் குறிப்பிட்டுள் ளார்.

கடந்த 12 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் அமைப்பினால் இந்த நிபுணர்குழு அறிக்கை உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்ட போதிலும் இதுவரையில் பகிரங்கப்படுத்த வில்லை

எனினும் அறிக்கையின் தகவல்கள் ஊடகங்களுக்கு கசியப்பட்டமை தொடர்பில் அதிருப்தி வெளியிடப் பட்டுள்ளது.

இந்த அறிக்கை எதிர்வரும் வாரத்தில் பகிரங்கப்படுத்தப்பட உள்ளதாகவும் இதனை வெளியிடவேண்டாம் என இலங்கை அரசாங்கம் கோரிவருவதாகவும் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)




அமெரிக்காவின் நாசா விண்வெளி மையத்தால் செவ்வாய்க்கிரகத்துக்கு அனுப்பப்பட்ட விண்கலம் அனுப்பியபடம் இது. செவ்வாயின் மேற்பரப்பின் அடிப்புறத்தில் காபனீரொட்சைட் உறைந்திருப்பதை இது காட்டுகிறது. இதன்மூலம் 6 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் செவ்வாயின் மேற்பரப்பு ஒரே புழுதிப்படலமாக இருந்திருக்கக்கூடும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

# அரசின் வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டித் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டித் தொகையாக மட்டும் கடந்த வருடம் 35, 260 கோடி ரூபாவை செலவிட நேர்ந்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 13.9 வீத வட்டித்தொகை அதிகரித்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கைகள் கூறுகின்றன.

கடந்த வருட இறுதி வரை அரசாங்கம் பெற்றுக் கொண்டுள்ள கடன்களில் இதுவரை திருப்பிச் செலுத்தாக தொகையாக ரூபா 4 ஆயிரத்து 59 ஆயிரம் கோடி எனவும் பிரஸ்தாப அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மொத்த தேசிய உற்பத்தியில் அது 81.6 வீதமாகும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் உட்கட்டமைப்பு உள்ளிட்ட அபிவிருத்திப்பணிகளுக்கே அரசாங்கம் பெருமளவான தொகையைக் கடனாகப் பெற்றுக் கொள்கின்ற போதிலும் அந்த நிதியின் அரைவாசிப்பங்கு கூட அப்பிரதேசங்களில் அபிவிருத்திப்பணிகளுக்காக செலவிடப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அதே நேரம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இன்றைய அமைதியான நிலவரம் காரணமாக மொத்ததேசிய உற்பத்திக்கான பங்களிப்பில் முன்னைய காலங்களை விடவும் அதிகூடியளவிலான பங்களிப்பு வழங்கப்பட்டு வருவதாகவும் மத்திய வங்கி அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. (ஸ்ரீ-2)

# நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக இராஜதந்திர ரீதியிலான எதிர்ப்பிரசாரம்

(கொழும்பு)

நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக இராஜதந்திர ரீதியிலான எதிர்ப்பிரசாரத்தை ஐ.நா.வுக்கான இலங்கையின் துணைப்பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஆரம்பித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் கடமையாற்றும் அனைத்து நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக் கையின் போலித்தன்மை மற்றும் அதன் சாட்சியமற்ற குற்றச்சாட்டுக் கள் தொடர்பில் அவர் விளக்கமளிக்கவுள்ளதாகவும் அறிவிக்கபட்டுள் ளது.

விடுதலைப் புலிகளை இராணுவரீதியாக தோற்கடித்த பின் அரசியல் ரீதியாக சவேந் திர சில்வா சர்வதேச சமூகத்தின் முன் மேற்கொள்ளும் முதலாவது நடவடி க்கை இதுவாகும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

வன்னி யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இராணுவத்தின் சேர்ச்சர் எனப்படும் உளவு விமானத்தில் இருந்து படம்பிடிக்கப்பட்ட புகைப் படங்கள் மற்றும் ஒளிக்காட்சி களையும் அவர் தன் தரப்பு சாட்சியங்களாக சமர்ப்பிக்கவுள்ளார்.

அதற்குமேலாக பல்வேறு கட்டங்களில் பொதுமக்கள் வழங்கிய சாட்சியங்களின் பிரதிகளையும் அவர் பிரசாரத்துக்கு பயன்படுத்தவுள்ளார்.வன்னி யுத்தத்தில் மருத்துவமனைகள் மற்றும் பொதுமக்கள் நிலைகள் மீது இராணுவம் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் பொய்யானது என்பதை நிரூபிக்கும் வகையில் அன்றைய கட்டத்தில் வெளி நாட்டு ஊடகவியலாளர்கள் சிலர் யுத்தப் பிரதேசங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் மேஜர் ஜெனரல் சவேந்தி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் விடுதலைப் புலிகள் இறுதிக் கட்ட யுத்தத்தின் கடைசி நாட்களில் நடந்து கொண்ட முறை குறித்தும் அவர்களின் செயற்பாடுகள் குறித் தும் ஆளில்லா உளவு விமானங்கள் மூலம் எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள் மற்றும் புகைப்படங்கள் என்பவற்றையும் அவர் ஐ.நா. சபையில் இணைந்துள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு விளக்கிக் காண்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# பாண் தவிர்ந்த ஏனைய பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலையை அதிகரிக்க வேண்டாம்

## பேக்கரி உரிமையாளர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பாணின் விலை அதிகரிக்கப் பட்டுள்ள நிலையில் அசாதாரணமான முறையில் ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையில் அதிகரிப்பை மேற் கொள்ள வேண்டாம் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் அனைத்து பேக்கரி உரிமையாளர்களிடமும் கேட்டுக் கொண்டுள்ளது.

சில பேக்கரி உரிமையாளர்கள் அசாதாரணமான முறையில் பாண் தவிர்ந்த ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையை அதிகரித்துள்ளதாக தமக்கு முறைப்பாடு பதிவாகியுள்ளதென அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என் கே.ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டதை அடுத்து அதனால் ஏற்படும் நஷ்டத்தை போக்கிக் கொள்ளும் முகமாக பேக்கரி உற்பத்திப்பொருட்களின் விலையில் அதிகரிப்பை மேற்கொள்ளத் தீர்மானித்ததாகவும் அதனால் நுகர்வோருக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் விலை அதிகரிப்பை மேற்கொள்வது அவசியம் என்று அவர் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கை மக்களின் மேம்பாட்டிற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவும்

## வருடாந்த அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 44 ஆவது வருடாந்த உயர் மட்ட மாநாடு வியட்நாம் தலைநகர் ஹனோயில் அடுத்த மாதம் 3 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இந்த நிலையில் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி நடைமுறை அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையின் படி உறுப்பு நாடுகளுக்கான கடனாக கடந்த ஆண்டில் ஆயிரத்து 700 கோடியே 51 இலட்சம் அமெரிக்க டொலர் களை வழங்க அனுமதி வழங்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

அதேவேளை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய உறுதி மொழிக்கு அமைய உறுப்பு நாடுகளின் அபிவிருத்தி பணிகளுக்காக தொடர்ந்தும் உதவும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கை உட்பட ஆசிய மற்றும் பசுபிக் நாடுகளில் உள்ள பொருளாதாரத்தில் பின்னடைவாக உள்ள மக்களின் மேம்பாட்டிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி செயற்படும் எனவும் அவ் வருடாந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)




தந்தை செல்வநாயகம்

34 ஆவது ஆண்டு நினைவுநாள்

அஞ்சலி நிகழ்ச்சி



காலம்: 26.04.2011 செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணி

இடம் : தந்தை செல்வா நினைவிடம்

தந்தை செல்வா சதுக்கம், யாழ்ப்பாணம்.

தலைவர்: அருட்கலாநிதி சு.ஜெபநேசன் அவர்கள்

-தலைவர், தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு-

சர்வமத பிரார்த்தனை

வரவேற்புரை: பேராசிரியர் ச.சத்தியசீலன் அவர்கள்

-செயலாளர், தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு-

சர்வமத பிரார்த்தனை:

நினைவுரை: பேராசிரியர் இ.சிவச்சந்திரன்

நன்றியுரை: பேராசிரியர் பெ.கனகசபாபதி

-தந்தை செல்வா, அறங்காவற் குழு உறுப்பினர்-

தமிழ்த் தேசியத்தின் தந்தை அவர்களை நினைந்து

இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும்

அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணம்.
22.04.2011

தந்தை செல்வா
நினைவு அறங்காவற் குழு.

(சி-3063)

# இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்

(7)

பேராசிரியர் சி.பத்மநாதன்,
B.A, Ph.D, LFIBA



## முன்னுரை....

சாசன வாசகங்களின் தொகுப்பான எட்டாம் அத்தியாயம் அச்சிடப்பெற்றபின் இச்சாசனத்திலுள்ள சிலபகுதிகளை வாசிக்க முடிந்தமையால் இதன்வாசகத்தை நூலில் சேர்த்துக்கொள்ள முடியவில்லை.

இந்தநூலில் அமைந்துள்ள நான்காவது முதல் ஏழாவது வரையான நான்கு அத்தியாயங்களும் பொலன்னறுவைக் காலத்துச்சாசனங்களைப் பற்றியவை. பிரம்மத் தேயங்கள் தொடர்பான நான்காவது அத்தியாயம் மிகவும் சுருக்கமானது. கந்தளாய் பிரம்மதேயம், ஜயங்கொண்ட கலாமேக சதுர்வேதி மங்கலம், ஶ்ரீபதி கிராமம் என்னும் பிரம்மதேய ஊர்க்ளைப்பற்றிய சாசனங்கள் இதில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இப்பிரம்மதேயங்கள் சோழர்காலத்தில் உற்பத்தியானவை. 12ஆம் நூற்றாண்டில் அவை சிறப்புற்றிருந்தன. தென்னிந்திய பிரம்மதேயங்களிற் போலக் கந்தளாய் பிரம்மதேயத்திற் பெரும் குறிப்பெருமக்கள் எனும் மகாசபையினர் நிர்வாகப் பொறுப்புக்களைக் கவனித்தனர்.

ஐந்தாவது அத்தியாயம் வீரசாசனங்கள் பற்றியது. வீரசாசனங்கள், வீரப்பட்டினங்கள் பற்றிய அவணங்களாகும். தென்னிந்தியாவில் உற்பத்தியாகிய நானாதேசிகளான ஐந்நூற்றுவர் இலங்கையின் உள்நாட்டு வாணிபத்திலும் வெளிநாட்டு வாணி பத்திலும் முதன்மை பெற்றிருந் தனர். அக்காலச் சமுதாயத்தில் அவர்களின் செல்வாக்கு மேலோங்கியிருந்தது. அவர்களின் வியாபாரத் தலங்களும் குடியிருப்புக்களும் சுயாட்சியுரிமைகொண்ட வீரபட்டினங்களாக வளர்ச்சி பெற்றன. இராசதானியிலும் நாட்டுப்புறங்களிலும் அவை அமைந்திருந்தன. கட்டனேரியான நானாதேசிக வீரபட்டினம்(வாஹல்கட), பதியான ஐம்பொழில்பட்டினம்(பதவியா), மாசேனகாமமாகிய தன்மசாகரப் பட்டினம்(விஹாரேஹின்ன), மாகலான விக்கிரமசலாமேகபுரம் என்பன அவற்றுட் சிலவாகும். பொலன்னறுவைக் காலச் சமுதாயத்திலே வீரபட்டினங்கள் பெரும் செல்வாக்குப்பெற்றிருந்த பொழுதிலும் மகாவம்சம்போன்ற நூல்களில் அவற்றைப்பற்றி எதுவும் கூறப்பட வில்லை. வீரபட்டினங்களைப்பற்றிய விவரங்கள் எல்லாம் வீரசாசனங்கள் மூலமே கிடைக்கின்றன. அண்மைக் காலத்திலே வீரசானங்களின் வாசகங்கள் இயலுமானவரையில் மீட்கப்பட்டுள்ளமை இலங்கைச் சாசனங்களைப்பற்றிய அய்வுகளில் ஒரு குறிப்பிடத்தக்க திருப்புமுனையாகும்.

ஆறாம் அத்தியாயம் படைவீரர்களின் சாசனங்களைப்பற்றியது. அச்சாசனங்களிற் பிரதானமானது. பொலன்னறுவையில் உள்ள வேளைக்காறரின் சாசனம். அதனைப்பற்றிய கட்டுரை மிகவும் விரிவானது. அச்சாசனத்தின் எல்லா அம்சங்களும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. வேளைக்காறப்படை பொலன்னறுவையில் வீரவளஞ்செயர் என்னும் வணிக கணத்தவர் அமைத்திருந்த நகரமொன்றின் காவலர் என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது. மேலும் இலங்கையில் ஏற்பட்ட சோழரின் ஆதிக்கப்படர்ச்சியில் வணிக கணங்களும் பங்கு கொண்டிருந்தன. என்ற நவமான கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஏழாம் அத்தியாயத்திலே முதலாம் பராக்கிரமபாகுவின் நயினாதீவுக் கல்வெட்டு முதலாம் மானாபரணனின் புதுமுத்தாவைக்கல்வெட்டு போன்ற அரசரின் பிரகடனங்கள் பற்றிய சாசனங்களும் பௌத்த பள்ளிகள், சிவன்கோயில்கள் என்பன தொடர்பான சாசனங்களும் விளக்கப்பட்டுள்ளன. நூலின் இறுதிப்பகுதி பிரதானமான சாசனங்களின் வாசகங்களின் தொகுப்பாகும். அவற்றிலே புள்ளிகளைத்தவிர்ந்த வேறுகுறியீடுகள் இடம்பெறவில்லை. கணணியில் அச்சிடமுடியாத கிரந்தஎழுத்துக்கள் பலவற்றை அடையாளமிடுவதற்கு இலக்கங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. இந்நாட்களிலே தமிழகத்திலே இந்த முறை வழமையாகி வருகின்றது.

ஆங்கிலத்தில் அமைந்த நூன்முகத்திலே இந்த நூலாக்கத்திற்கு உதவிபுரிந்த நிறுவனங்கள், அறிஞர்கள்,அதிகாரிகள், நண்பர்கள் முதலானோரைப்பற்றி எமது இதய பூர்வமான பாராட்டுக்களையும் நன்றியினையும் வெளிப்படுத்தியுள்ளோம். இங்கு மேலதிகமாக கலாநிதி செ.இராசகோபால்(தமிழ்நாடு தொல்பொருள் திணைக்களத்து முதுநிலை சாசனவியலாளர்),தேவமணி ரஃபேல் ஆகியோர் மீதான எமது நன்றியுணர்வுகளைப்பதிவு செய்வது சாலவும் பொருந்தும். அவர்களிருவரும் இல்லையென்று சொல்லும் மனப்பாங்கு இல்லாதவர்கள். ஆய்வு முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவதில் ஆர்வம் கொண்டவர்கள். இந்நூலில் இடம்பெறும் சாசனங்களின் நிழற்படங்கள் சில அவர்களிடமிருந்து கிடைத்தவை. அவர்களுக்கு எமது பாராட்டுக்கள் உரித்தானவை. முன்னுரையில் இடம்பெறும் பிராமிச்சாசனங்களின் நிழற்படங்கள் சில ஐராவதம் மகாதேவனது நூலில் இருந்தும் தமிழ்நாடு தொல்பொருள் துறையினர் வெளியிட்ட நூலில் இருந்தும் பெறப்பட்டன. அவர்களுக்கு எங்கள் நன்றிகள் உரித்தானவை.

இந்நூல் பேராசிரியர் நொபொ$_3$ரு காறஷீமாவிற்குச் சமர்ப்பணமாகின்றது. அவர் ஜப்பானிலுள்ள இந்திய வரலாற்று ஆய்வாளர்களில் முதன்மையானவர். பல ஆய்வு நூல்களின் ஆசிரியர். அவை தமிழ்ச்சாசனங்களை ஆதாரமாகக் கொண்டவை ஆய்வாளர் என்ற வகையில் அவர் உலகில் நன்கு அறிமுகமானவர். தமிழகத்தில் வரலாறு தொடர்பான ஆய்வுகளில் ஈடுபடுவோருக்கு ஆதரவும் பயிற்சியும் வழங்குவதில் முன்னின்றவர். அவரது புலமை சார்ந்த தகைமைக்கும் இலங்கைத் தமிழ்ச்சாசனங்கள் தொடர்பான ஆய்வுகளின் முன்னேற்றத்தில் அவர்புரிந்த சாதனைக்கும் உரிய பாராட்டுக்களின் அடையாளமாக இச்சமர்ப்பணம் அமைகின்றது.

♦♦♦♦

## இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் வெளியீடுகளும் பூர்வாங்க ஆய்வுமுயற்சிகளும்

ஈழத்துச்சாசனங்களிற் பெரும்பாலானவை தொல்பொருள் திணைக்களம் மேற்கொண்ட அகழ்வாராய்வுகளின் மூலமே கிடைத்துள்ளன. நாட்டிலுள்ள தொல்பொருள் சின்னங்கள் யாவும் அரசாங்கத்தின் உடமைகளாகும் என்பது சட்டம். தொல்பொருள்கள் சம்பந்தமான அகழ்வாராய்ச்சிகள் அரசாங்கத் திணைக்களமான தொல்பொருள் திணைக்களத்தின் உரிமையாகும். தொன்மையான கலாசார சின்னங்களைப் பேணுவதும் பாதுகாப்பதும் அதன் கடமையாகும். அத்திணைக்ளத்தின் செயற்பாடுகளும் மத்திய மயமாக்கப்பட்டவை. அதன் பொறுப்பிலுள்ள அருங்காட்சியகங்கள் கொழும்பிலும் நாட்டின் வேறுபகுதிகளிலும் உள்ளன.

கடந்த மூன்று தசாப்தங்களாக கலாசார முக்கோணம் என்ற பாரிய நிறுவனமும் இயங்கிவருகின்றது. அதன்சார்பிலும் பலகோடி பணச் செலவிலும் அகழ்வாராய்ச்சிகள் நடைபெற்றன. ஒதுக்கீடானது முதல், முற்றுமுழுதாக விரையமாகிவிட்டதால் இந்நாட்களில் பயனுடைய கருமங்களை அதனாற் செய்யமுடியவில்லை. சாசன்களைப் படி எடுப்பது முன்னே குறிப்பிட்ட இருநிறுவனங்களின் பொறுப்பாகும். அவற்றின் அதிகாரிகளின் அனுசரணையின்றி வேறெவரும் சாசனங்களைப் படி எடுப்தற்கு அனுமதி அளிக்கப்படுவதில்லை.

பயிற்சி பெற்றவர்களே சாசனங்களைப் படி எடுக்க முடியும். தொல்பொருளியல் பேராதனை, களனி ஆகிய இடங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் ஒரு பாடமாக போதிக்கப்படுவதால் அங்குள்ள ஆசிரியரிலும் மாணவரிலும் சிலர் சாசனங்களை படி எடுப்பதற்குப் பழகிக்கொண்டனர். தமிழ்ச்சாசனங்கள் சிலவற்றைப் படி எடுப்பதற்கும் அவற்றை ஆராய்வதற்கும் எமக்கு இதுவரை உதவிபுரிந்த ஒரேயொருவர் பேராதனைப் பல்கலைக்கழகத்து விரிவுரையாளரான பியதிஸ்ஸ சேனாநாயக்க என்பவர். தமிழ்ச்சாசனங்களை படி எடுக்கும் முயற்சிகளில், ஈடுபாடுகொண்டு , முன்னேற்றம் கண்டவர்களான பேராசிரியர் கா. இந்திரபாலாவும் கலாநிதி செ.குணசிங்கமும் இருதசாப்தங்களுக்குமுன்பே இலங்கைத் தேசத்தை விட்டு வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டனர். அவர்களிருவரும் தமிழ்ச் சாசனங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர்.

## தொல்பொருளியல் அகழ் வாராய்வுகளும் சாசனங்களும்

இலங்கையிலுள்ள பிரித்தானிய அரசாங்கம் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே ஒரு அரசாங்க நிறுவனமாக தொல்பொருளியல் திணைக்களத்தை நிறுவியது. வித்துவப்புலமையும் வாதத்திறமையும் மிக்கவரான கு.முத்துக்குமாரசுவாமி சட்டசபைமூலம் மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக ஒரு தேசிய நிறுவனமாகக் கொழும்பில் அருங்காட்சியகம் நிறுவப்பட்டது. இந்தியா, பர்மா போன்ற நாடுகளிற்போல, பிரித்தானியர் ஆட்சியிலும் அதற்குப் பிற்பட்ட சில வருடங்களிலும் தலத்திலிருந்து எடுத்துச்செல்லக்கூடிய சாசனங்களைப் பாதுகாப்பாகப் பேணிக்கொள்வதற்காக அவற்றை அருங்காட்ச்சியகங்களில் வைத்தனர். அதனாற் பல தமிழ்க் கல்வெட்டுக்கள் கொழும்பிலும் அநுராதபுரத்திலும் அமைந்துள்ள அருங்காட்சியகங்களில் உள்ளன.

கடந்த சில தசாப்தங்களாகச் சாசனங்களைப் பொறுத்தவரையில் உரியவர்களால் இந்தக்கரிசனை காட்டப்படவில்லை. காலாசார முக்கோணத்தினர் நடத்திய அகழ்வாரய்ச்சிகளின்போது கிடைத்த சில தமிழ்ச்சாசனங்கள் இப்பொழுது காணப்படவில்லை. பல தசாப்பதங்களுக்கு முன்பு தொல்பொருளியல் திணைக்களத்தினர் அடையாளங்கண்ட சில சாசனங்களும் மறைந்துவிட்டன. திருகோணமலைக் கோட்டை வாசலில் மீன் இலச்சினையோடு கூடிய "குளக்கோட்டன் கல்வெட்டு" கட்புலனுக்குக் கிட்டாதவாறு மறைந்துள்ளது. கருமையான மைப்பூச்சினாலே சாசனத்தை மறைத்துவிட்டனர். எதிர்ப்புறமாகவுள்ள சுவரில் அமைந்த சாசனம் காலத்தால் அதிலும்முற்பட்டதாகும் அதனை முற்காலத்துத் தொல்பொருளியல் விற்பன்னரும் அரசாங்க அதிகாரரிகளும் அடையாளங்காணத் தவறி



பேராசிரியர் நொபொ$_3$று காறஷீமா அவர்களுக்கு சமர்ப்பணம்

விட்டனர்.பல தடவைகளாக மீண்டும் மீண்டும் பூச்சினால் மெழுகப்பட்டதால் அடையாளங் காண முடியாத நிலையை அது அடைந்துவிட்டது.

இலங்கையின் புராதன நகரங்களின் அழிபாடுகள் காணப்பட்ட இடங்களில் அகழ்வாய்வுகளை மேற்கொள்ளும் பணிகளில் தொல்பொருளியல் திணைக்களம் அதன் ஆரம்பகாலம் முதலாக ஈடுபட்டது. ஆண்டுதோறும் நடைபெற்ற அகழ்வுகளிற் கிடைத்த தொல்பொருட் சின்னங்களைப் பற்றிய விவரங்கள் அத்திணைக்களத்தின் ஆணையாளரால் வெளியிடப்பட்ட ஆண்டறிக்கைகளில் இடம் பெற்றன. சாசனங்களைப்பற்றிய செய்திகளும் அவற்றிலே சிலசமயங்களில் வெளியிடப்பட்டன. 1891 முதலாகக் கிடைத்த தமிழ்ச்சாசனங்களைப்பற்றிய விபரங்கள் அடங்கிய அட்டவணை 1911-12 ஆம் ஆண்டுகளுக்குரிய அறிக்கையில் அடங்கியிருந்தது. அதில் 48 கல்வெட்டுக்கள் பற்றிய சுருக்கமான விவரங்கள் காணப்பட்டன[2]. அதற்குப் பின்பு பல சாசனங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலே தொல்பொருளியல் திணைக்களத்தினாற் கண்டெடுக்கப் பெற்ற கல்வெட்டுக்கள் பற்றிய விவரங்கள் அத்திணைக்களத்தின் ஆண்டறிக்கைளிற் குறிப்பிடப்பட்டன. கடந்த30 ஆண்டுகளாக அத்திணைக்களத்தின் ஆண்டறிக்கைகள் வெளிவரவில்லை.

(தொடரும்)

# உலகக் கிண்ண கிரிக்கெட் பரிசுப் போட்டி முடிவுகள்

நடந்து முடிந்த பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரை முன்னிட்டு உங்கள் வலம்புரி பரிசுப்போட்டி நடாத்தியது. தினம் ஒரு பரிசு என்ற மாபெரும் பரிசுப்போட்டியில் வெற்றிபெற்றோர் மற்றும் சரியான விடையை எழுதிய வாசகர்களின் விபரங்கள் இங்கு பிரசுரமாகின்றன.

இப் பரிசுப் போட்டிக்கு பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் தமது பங்களிப்பை வழங்கி ஆதரவையளித்தனர். அத்துடன் சரியான விடையை எழுதி ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை சமர்ப்பித்தனர். இவ்வாறு ஆதரவு வழங்கிய வாசகர்களாகிய உங்களுக்கு வலம்புரிக் குடும்பம் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றது. அத்துடன் இப்பரிசுப் போட்டிகளை நடாத்துவதற்கு அனுசரணை வழங்கிய ஒலிம்பியா ஸ்போட்ஸ், M.C.S, அல்டி எலக்ரோனிக், நவகலா, Suntel ஆகிய நிறுவனங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## தினம் ஒரு பரிசு – 23

***உலகக் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் இலங்கை அணி எத்தனை தடவை இறுதிப் போட்டி வரை முன்னேறியது?***

**விடை :- இரண்டு**

*பரிசு பெறுபவர்கள் :-*

1) **இ.ஸ்ரீகஜன் (புனித அந்தோனியார் வீதி, சுன்னாகம்)**
2) **ஸ்ரீ.சம்ஷிகா (பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்)**
3) **சி.செந்தூரன் (சண்டிலிப்பாய் வடக்கு)**
4) **இ.திருமுருகன் (மாவடி ஆலைய வீதி, சங்கானை)**
5) **ர.மயூரன் (உடுத்துறை வடக்கு, தாளையடி)**

*பாராட்டுப்பெறுபவர்கள்......*

ப.உதயகுமார் (மஞ்சத்தடி கோவில் வீதி, இணுவில் கிழக்கு), ப.சசிதரன் (5ம் வட்டாரம், நயினாதீவு), சி.சசிந்தன் (கல்லாரை, மல்லாகம்), நெ.அனோஜ் (அடம்பன் வீதி, யாழ்ப்பாணம்), செ.சாந்தினிதேவி (ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு), செ.செந்தூரன் (பிரம்படி வீதி, கொக்குவில்), ந.தர்மேந்திரன் (9ம் வட்டாரம், புங்குடுதீவு), ந.லோஜிதன் (கரவெட்டி மத்தி, கரவெட்டி), சு.ரதிதேவி (வளாக வீதி, கொக்குவில் கிழக்கு), சா.ஜினேஸ் (திருநகர் வடக்கு, கிளிநொச்சி), தி.விமலதாஸ் (இராஜதோப்பு, கண்டி வீதி), ரி.பிரணவன் (ஆலடி, வல்வெட்டித்துறை), எம்.பிரான்சிஸ்க் (பருத்தித்துறை வீதி, தும்பளை), எஸ்.கலாதாசன் (ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை), கே.அரசேஸ்வரன் (கலைமகள் வீதி, நல்லூர்), எஸ்.திருமகள் (புளியங்கண்டு வீதி, ஆனைக்கோட்டை), த.சுஜேந்திரா (மணத்தறை வீதி, கந்தர்மடம்), றூ.கம்சிகாந் (பாரதி வீதி, நாயன்மார்கட்டு), செ.வினோஸ் (குப்பிழான் வடக்கு, குப்பிழான்), ரி.பிரதீப் (ஆலடி, வல்வெட்டித்துறை), ம.டே.தம்பிராஜா (சி.பி.எம் ஒழுங்கை, கண்டி வீதி), பா.சோஜிந்தன் (அளவெட்டி தெற்கு, அளவெட்டி), ரி.காணப்பிரியா (ஆலடி, வல்வெட்டித்துறை), எஸ்.நிறோஜன் (மனோகரா, அல்வாய்), கி.கபில் (பூலசிட்டி, அச்செழு), சி.திருவணந்தன் (கூட்டுறவானர் வீதி, அளவெட்டி), ஆர்.ராம்ஜி (கில்னர் லேன், யாழ்ப்பாணம்), சு.சோபியா (தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்)

## தினம் ஒரு பரிசு – 24

***உலகக்கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் அதிக வெற்றிகளைத் தேடித்தந்த அணித்தலைவர் யார்?***

**விடை :- ரிக்கி பொண்டிங்**

*பரிசு பெறுபவர்கள் :-*

1) **அ.பொபிஅனஸ்ரின் (கோவில் வீதி, யாழ்ப்பாணம்)**
2) **கெ.கோபினா (கே.கே.எஸ் றோட், கோண்டாவில் மேற்கு)**
3) **செ.பார்த்தூரன் (பிரம்படி வீதி, கொக்குவில்)**
4) **ற.ஜெவான் (கதிற்றல் வீதி, யாழ்ப்பாணம்)**
5) **ஏ.சர்மிளா (கதிரவேலு ஒழுங்கை, யாழ்ப்பாணம்)**

*பாராட்டுப்பெறுபவர்கள்......*

வீ.தனுஜியா (கொக்குவில் கிழக்கு), ஆர்.ராம்ஜி (கில்னர் லேன், யாழ்ப்பாணம்), சி.செந்தில்நாதன் (கோண்டாவில் கிழக்கு), றூ.கம்சிகாந் (நாயன்மார்கட்டு), ம.பிரதீஸ்வரன் (வேளாதோப்பு, யாழ்ப்பாணம்), க.கலையமுதன் (மருதநகர், கிளிநொச்சி), ரி.பிரணவன் (ஆலடி, வல்வெட்டித்துறை), ரி.பிரதீப் (ஆலடி, வல்வெட்டித்துறை), கோ.மணிவண்ணன் (சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்), நெ.அனோஜ் (அடம்பன் வீதி, யாழ்ப்பாணம்), தி.விமலதாஸ் (இராஜதோப்பு வளவு, சாவகச்சேரி), இ.ஸ்ரீகஜன் (புனித அந்தோனியார் வீதி, சுன்னாகம்), செ.கஜானன் (விடத்தற்பளை, மிருசுவில்), மு.முத்துக்குமாரு (உச்சி யோடை, மானிப்பாய்), த.சுஜேந்திரா (கந்தர்மடம், யாழ்ப்பாணம்), எஸ்.சுகன்ஜா ( பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்), கி.சிவராசபவன் (குரும்பை கட்டி, புலோலி வடமேற்கு), ப.உதயகுமார் (இணுவில் கிழக்கு), யே.அன்ரன் பிலிப்பின்தாஸ் (கட்டுடை, மானிப்பாய்), க.ஜனகன் (அல்வாய் தெற்கு), ந.தர்மேந்திரன் (9ஆம் வட்டாரம், புங்குடுதீவு), சா.ஜினேஸ் (திருநகர் வடக்கு, கிளிநொச்சி), எம்.விதுசன் (சங்கானை மேற்கு), ச.பிரபாலினி (செம்பாடு, பொலிகண்டி மேற்கு), எஸ்.கலாதாசன் (ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை), த.நீலலோகன் (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), யே.அன்ரன்பிலிப்பின்தாஸ் (கட்டுடை, மானிப்பாய்), எஸ்.திருமகள் (புளியங்கண்டு வீதி, ஆனைக்கோட்டை), அ.நீ.குலேந்திரன் (ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), ச.அபிராம் (5ம் வட்டாரம், நயினாதீவு), பா.சோஜிந்தன் (அளவெட்டி தெற்கு, அளவெட்டி), சி.திருவனந்தன் (கூட்டுறவானர் வீதி, அளவெட்டி), ந.லோஜிதன் (கரவெட்டி மத்தி, கரவெட்டி), எஸ்.நிறோஜன் (மனோகரா, அல்வாய்), எஸ்.துசான் (சங்கரத்தை வீதி, வட்டுக்கோட்டை), ந.தாரங்கி (பண்டாரிக்குளம் மேற்கு ஒழுங்கை, நல்லூர்), ரி.பிரகாஸ் (மானிப்பாய் வீதி, உரும்பிராய் மேற்கு), நா.சுந்தரலிங்கம் (சத்தியசாயி பல்பொருள் வாணிபம், தொட்டிலடி), ந.பரமேஸ்வரன் (நுணாவில் சந்தி, சாவகச்சேரி)


## தினம் ஒரு பரிசு – 25

***கடந்த 2007ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் மர்மமான முறையில் மரணமான பயிற்றுவிப்பாளர் யார்?***

**விடை :- பொப் வூல்மர்.**

*பரிசு பெறுபவர்கள் :-*

1) **கே.சபீகரன் (ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)**
2) **கோ.மணிவண்ணன் (சங்கரப் பிள்ளை வீதி, மானிப்பாய்)**
3) **நெ.அனோஜ் (2ம் ஒழுங்கை, அடம்பன் வீதி, யாழ்ப்பாணம்)**
4) **ரி.பிரணவன் (ஆலடி, வல்வெட்டித்துறை)**
5) **கெ.வக்சன் (புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்)**



*பாராட்டுப்பெறுபவர்கள்......*

ப.உதயகுமார் (மஞ்சத்தடி கோவில் வீதி, இணுவில் கிழக்கு), ரி.காணப்பிரியா (ஆலடி, வல்வெட்டித்துறை), றூ.கம்சிகாந் (பாரதி வீதி, நாயன்மார் கட்டு), எஸ்.நிறோஜன் (மனோகரா, அல்வாய்), ஆ.தோமஸ் (சென்தோமஸ் ஒழுங்கை, பருத்தித்துறை), யே.அன்ரன் பிலிப்பின்தாஸ் (கட்டுடை, மானிப்பாய்), செ.மாதுரன் (பிரம்படி வீதி, கொக்குவில்), பா.சோஜிந்தன் (அளவெட்டி தெற்கு, அளவெட்டி), இ.அம்பிகபாலன் (துரையப்பா வீதி, கருவில்), ஆர்.சுகந்தன் (கோவில் வீதி, நல்லூர்), ந.விக்னேஸ்வரன் (பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு), எஸ்.கலாதாசன் (ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை), எம்.பிரான்சிஸ்க் (பருத்தித்துறை வீதி, தும்பளை), அ.நீ.குலேந்திரன் (ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), இ.பிரியந்தன் (சரசாலை வடக்கு, சரசாலை), ப.சசிந்தன் (5ம் வட்டாரம், நயினாதீவு), சி.திருவனந்தன் (கூட்டுறவானர் வீதி, அளவெட்டி), சா.ஜினேஸ் (திருநகர் வடக்கு, கிளிநொச்சி), க.ஜனகன் (அல்வாய் தெற்கு, அல்வாய்), த.சுஜேந்திரா (மணத்தறை ஒழுங்கை, கந்தர்மடம்), ரி.பிரதீப் (ஆலடி, வல்வெட்டித்துறை), நா.சுந்தரலிங்கம் (தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்)

## தினம் ஒரு பரிசு – 26

***பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் அதிக பவுண்டரிகளை விளாசிய வீரர் யார்?***

**விடை :- சச்சின் டெண்டுல்கர்**

**பரிசு பெறுபவர்கள் :-**

1) **க.மேகலா (அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை)**
2) **என்.தனுராங்கி (பண்டாரிக்குளம், நல்லூர்)**
3) **மு.கஜந்தன் (வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தண்கேணி)**
4) **ரி.தயானி (மானிப்பாய் வீதி, உரும்பிராய் மேற்கு)**
5) **பி.ஜெனிபா நிலோனி (டேவிட் றோட், யாழ்ப்பாணம்)**

*பாராட்டுப்பெறுபவர்கள்......*

க.கலையமுதன் (இராமநாதன் கமம், மருதநகர்), ப.உதயகுமார் (மஞ்சத்தடி கோயில், இணுவில்), ரி.காணப்பிரியா (ஆலடி, வல்வெட்டித்துறை), எஸ்.கலாதாஸன் (ஆதிகோவிலடி, வி.வி.ரி), ந.லோஜிதன் (கரவெட்டி மத்தி, கரவெட்டி), இ.ராம்ஜி (கில்னர் லேன், யாழ்ப்பாணம்), போ.கஜிபன் (மூளாய் தெற்கு, சுழிபுரம்), து.சாருஜன் (காஞ்சூரைப்புலம், வல்வெட்டித்துறை), யே.அன்ரன் பிலிப்பின்தாஸ் (கட்டுடை, மானிப்பாய்), றூ.கம்சிகாந் (பாரதி வீதி, நாயன்மார் கட்டு), செ.சாந்தினிதேவி (ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு), த.பானுமகேந்திரா (மணல்தறை லேன், கந்தர்மடம்), கே.அரசேஸ்வரன் (கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு), கி.கபில் (பூலசிட்டி, அச்செழு), எஸ்.நிறோஜன் (மனோகரா, அல்வாய்), எஸ்.சுகந்தி (கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்), செ.கஜானன் (விடத்தற்பளை, மிருசுவில்), தி.மணிமோகன் (பன்னாலை, கெல்பிப் பாறை), த.நீலலோகன் (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), ந.தர்மேந்திரன் (9ம் வட்டாரம், புங்குடுதீவு), பா.சோஜிந்தன் (அளவெட்டி தெற்கு, அளவெட்டி), ந.விக்னேஸ்வரன் (பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு), சி.நடேஸ் (தெணியம்பை, வல்வெட்டித்துறை), சி.சிவறாஜி (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), ச.பிரபாலினி (செம்பாடு, பொலிகண்டி மேற்கு), ஆர்.சசிக்குமார் (மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணை), ஆர்.சுகந்தன் (கோவில் வீதி, நல்லூர்), சு.சோபியா (தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்), ந.பரமேஸ்வரன் (நுணாவில் சந்தி, சாவகச்சேரி)

***(தினமொரு கேள்வி போட்டிக்கான மிகுதி விபரங்கள் நாளை தொடரும்)***

# யாழ்.மாவட்டத்தில் அஸ்வகந்தி எனும் அமுக்கிரா மூலிகையின் பரீட்சார்த்த பயிர்ச்செய்கை

(1)

யாழ். மாவட்டமானது பல்வேறு தரைத்தோற்ற வேறுபாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. எனவே மண்வளர்ச்சிக்கேற்ப பல்வேறு தாவரங்கள் வளரக்கூடிய, பயிரிடக்கூடிய சூழலையும் கொண்டுள்ளது. தரிசு நிலங்களும் யாழ்.மாவட்டத்தில் காணப்படுகின்றது. எனவே பல்வேறு மூலிகைகளும் பயிரிடக்கூடிய மண் வளம் காணப்படுகின்றது.

அமுக்கிரா எனும் மூலிகை சுதேச மருத்துவத்தின் மருந்துத் தயாரிப்பில் முக்கியமானதொன்றாகும். முக்கியமாக நரம்புரமாக்கி (Nervine tonic) எதிர் ஒட்சியேற்றி (Anti oxidant) போன்ற முக்கிய மருத்துவச் செய்கைகளையும் மருத்துவக்குணங்களையும் கொண்டுள்ளது. அமுக்கிராச் செடியானது வெப்பமான பிரதேசத்தில் நன்கு வளரக்கூடியது. இது முதுமையை நீக்கி இளமையை கொடுக்க கூடியதும் விந்துற்பத்தியை பெருக்கக் கூடியதுமான குணங்களைக் கொண்டது.

'அஸ்வம்' என்றால் குதிரை. 'கந்தம்' என்றால் மணம். இது குதிரையின் சக்தி கொண்டது. 'கொரியன் ஜிங்சங்' என்ற மூலிகை சீனமருத்துவத்தில் ஆண்மை வீரியத்துக்கு முக்கியமாக பயன்படுத்தப்படுகிறது. இது ஒரு பிரபலமான மூலிகை. இதற்கு இணையாக இந்திய மருத்துவத்தில் அமுக்கிராக் கிழங்கின் மகத்துவம் இருப்பதாக இதனை 'இந்தியன் ஜிங்சங்' என்று குறிப்பிடுகின்றனர். தொன்றுதொட்டு சித்தமருத்துவத்தில் அமுக்கிரா உடல்தேற்றி, உடல் உரமாக்கி மற்றும் ஆண்மை பெருக்கியாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் சித்தமருத்துவத்தின் தந்தை என்று போற்றப்படும் அகத்தியர் இதன் பெருமையை பாடலாக அப்பொழுதே எழுதிவைத்துள்ளார்.

அமுக்கிரா செடியின் விதைகளுடன் கூடிய உலர்கனிகள்



கடல் மட்டத்திலிருந்து சுமார் 5500 அடி உயரம் வரையுள்ள பகுதிகளில் பயிரிடப்படுகிறது. இந்திய மருத்துவ முறைகளில் சுமார் 3 ஆயிரம் ஆண்டுகளாக இதன் பயன்பாடு இருந்து வருகிறது.

வேறு பயிர்கள் வளரமுடியாத இடத்தில் கூட அமுக்கிராச் செடியானது இலகுவில் வளரும். இதில் சீமை அமுக்கிரா, நாட்டு அமுக்கிரா என இரு இனங்கள் உண்டு. எனது கடைகளில் இரு இனங்களும் வேராக (உலர்சரக்கு) கிடைக்கும். காடுகளிலிருந்து சேகரிக்கப்படுவது, பயிரிடப்பட்டு சேகரிக்கப்படும் அமுக்கிராவிலிருந்து வேறுபடுகின்றது. அதாவது உருவவியல் ரீதியாகவும் மருத்துவக் குணங்களின் அடிப்படையிலும் வேறுபடும்.



அமுக்கிரா பரீட்சார்த்த பயிர்ச் செய்கை தோட்டம்

தாவரவியல் வல்லுநர்களினால் இரு இனங்களிலும் தற்காலத்தில் பயிரிடப்பட்டு பெறப்படும் அமுக்கிராவுக்கு Withania ashwagandha (Atal & Schwarting, Eco.Bot, *1961, 15, 256*) என புதிய பிரத்தியேக பெயரிடப்பட்டுள்ளது. எனவே பயிர்ச்செய்கையை ஆரம்பிக்க முன்பு தரமான விதைகளை சேகரித்து கொள்ள வேண்டும்.

விதைகளை நன்கு சுத்தமான நீரில் கழுவி துடைத்து நாற்றுமேடைகளில் போடவேண்டும். நாற்று மேடையை நிழலுக்காக மூடிவிட வேண்டும். நாற்றுக்கள் உருவான பின்பு இடையிடையே நீர் தெளித்து விட வேண்டும். 2-3 கிழமைகளின் பின் நாற்றுக்களை நாற்று மேடையிலிருந்து வேறு இடங்களில் எடுத்து நடலாம். நாற்றுக்கள் நடும்போது ஆணிவேரின் நுனியை (tap root) நுனியை வெட்டி நடுவதால் பக்கவேர்கள் நன்கு (Lateral roots) கிளைவிட்டு விரைவில் செடிவளரும்.

மழைகாலத்திற்கு சிறிதுகாலத்திற்கு முன்பு விதைகளை நாற்றுமேடையில் போடவேண்டும். நீர்ப்பாசனம் தேவை. ஆனால் அளவுக்கதிகமான மழை பயிர்ச்செய்கையை பாதிக்கும். அமுக்கிராத் தோட்டத்தில் அளவுக்கதிகமான களைப்பயிர்கள் வளர ஏதுவாகும். பசளை அதிகம் போடத் தேவையில்லை. Nitrogenous fertilizers அமுக்கிராச் செடிகளின் இலைகளின் வளர்ச்சியை அதிகரித்து வேரின் வளர்ச்சியை கட்டுப்படுத்தும்.

டாக்டர் திருமதி வி. சத்தியசீலன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

டாக்டர் த. விஜயகுமார்
பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி,
ஆயுள் வேதம்.

ஏனெனில் மருத்துவ பிரயோகத்திற்கு வேர்களே அறுவடை செய்து பயன்படுத்தப்படுகிறது. எனவே வெப்பமான வளமற்ற மண்வளத்தில் கூடப் பயிரிடலாம். அமுக்கிராச் செடியின் பூக்களையும் பழங்களையும் மார்கழி மாதத்தில் காணலாம். செடி நிறைய பழங்கள் உருவாகும். ( தொடரும்)

## இவ்வருட மே தின நிகழ்வுகளில் வட-கிழக்கு தொழிலாளர்கள் பங்கேற்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்தர முன்னணியினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மேதின நிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பொரள்ளை கம்பல் பூங்கா, நாரஹேன்பிட்டி, மாலிகாகந்த மற்றும் ராஜகிரிய ஆகிய இடங்களில் இருந்து புறப்படும் நான்கு ஊர்வலங்களும் நகர மண்டபத்தை வந்தடையும் என முன்னணியின் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இந்த வருட மே தினத்தில் 3 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் பங்கு கொள்வர் என தெரிவித்த அவர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் உரையாற்றவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை, இந்த வருட மே தின நிகழ்வுகளில் வடகிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும் கலந்து கொள்வர் என தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## டெங்கு காய்ச்சல் காரணமாக முப்பத்திரண்டு பேர் உயிரிழப்பு

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியினுள் டெங்கு காய்ச்சல் காரணமாக 32 மரணங்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த காலப்பகுதியினுள் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்ட மூவாயிரத்து 784 பேர் பதிவாகியுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் 716 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிக டெங்கு நோயாளர்களும் டெங்கு மரணங்களும் பதிவாகியிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உள்ளக பருவப் பெயர்ச்சி மழை பெய்ய ஆரம்பித்துள்ள நிலையில் டெங்கு காய்ச்சல் பரவக் கூடிய அபாயமும் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

## விரிவுரையாளர்களின் வேதனப்பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்கு குழு நியமனம்

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வேதனப் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசவிருப்பதாக விரிவுரையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்காக ஜனாதிபதியை சந்திக்க ஏற்பாடுகளை செய்து தருமாறு கோரி உயர் கல்வி அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் விரிவுரையாளர்களின் வேதனப் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க குழு ஒன்றை நியமித்துள்ளார்.

கபீர்ஹசீம், லக்ஸ்மன் கிரியல்ல, விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் அகில விராஜ் ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் அடிப்படையில் ரணில் விக்ரமசிங்க விரிவுரையாளர்களுடன் கலந்துரையாடுவார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ஸ்ரீ-2)

## நுவரெலியாவில் கடும் மழை; நகரின் பல இடங்களிலும் வெள்ள அனர்த்தம்

(கொழும்பு)

நுவரெலியாவில் பல்வேறு பிரதேசங்களிலும் பெய்த அதிக மழை காரணமாக நகரின் பல இடங்களில் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது.

கிரகிரி குளத்தின் வாயில் திறந்து விடப்பட்டதன் மூலம் வெள்ள நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவ இணைப்பதிகாரி ரந்தன ஹேமவர்த்தன குறிப்பிட்டார்.

இதேவேளை, மண்மேடு சரிந்து விழுந்ததால் ஹங்குராங்கெத்த, தெல்தோட்டை ஈஹறவாஹெட்ட வீதி ஊடான வாகனப் போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் லூல்கந்தூர பாலத்திற்கு அருகில் நேற்று முன்தினம் மாலை மண் மேடு சரிந்து வீழ்ந்துள்ளதாக நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

வீதியிலுள்ள மண்ணை அகற்றும் நடவடிக்கைகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட இடர் முகாமைத்துவ இணைப்பதிகாரி தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# ஆனந்த அலை

### ஆனந்தத்தைப்பழகிக் கொள்ளுங்கள்

சொர்க்கம் எங்கேஇருக்கிறது என்று உங்களுக்குத்தெரியுமா? பூமிதான் சொர்க்கம். நீங்கள் அங்கேதான் இருக்கிறீர்கள். இதற்கு சான்று வேண்டுமா உங்களுக்கு? அப்படிஎன்றால் வீட்டில் சான்று



இல்லையா? கண்ணாடியில் பார்த்தாலும் சான்று தெரியவில்லையா? அனைவரும் சொர்க்கத்திற்குச் செல்லவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். ஆனால் நீங்கள் வாழும் இந்தப்பூமியே சொர்க்கம்தான். உங்களுக்கு நிரூபிக்க ஏதாவது சாட்சி வேண்டுமா?

ஒருநாள் சங்கரன்பிள்ளைக்கும் அவரது மனைவிக்கும் ஒரு குழந்தை பிறந்தது. சங்கரன்பிள்ளை வீட்டில் மாடு எதுவும் கிடையாது. ஒருநாள் சங்கரன்பிள்ளை போகும்வழியில் எவரோஒரு வீட்டில் எட்டு மாடுகள் இருந்தன. "ஓ! எட்டுமாடுகள் இருக்கிறதே. நம்வீடடில் குழந்தை இருக்கிறது. மாடு இல்லையே" எனறு சொல்லிக் கொண்டே அந்தவீட்டில் இருக்கிற மாட்டைத் திருடி தன்வீடிற்குக் கொண்டுவந்து விட்டார். பால்கறந்து குழந்தையை நன்றாக வளர்க்கிறார்கள். மாடு பறிகொடுத்வர்கள் பத்துநாட்கள் கழித்து இதைக்கண்டு பிடித்து விட்டார்கள்.

அவர்கள் "எங்கள் வீட்டு மாட்டை திருடிவிட்டாயே" என்ற பொழுது, சங்கரன் பிள்ளை "நான் திருடவில்லை. இது எங்கள் வீட்டு மாடு" என்று சொன்னார். அவர்கள் புகார் கொடுத்தார்கள். அதன்பின் வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்றது. நீதிமன்றத்தில் மாட்டைப்பறி கொடுத்வர்கள் "இவர் எங்கள் வீட்டிலிருந்துதான் இந்த மாட்டைத் திருடியிருக்கிறார். என்னிடம் சாட்சிகள் இருக்கிறார்கள்" என்றார். அதற்கு சங்கரன் பிள்ளை, "அதற்கு என்ன? நான் திருடவில்லை. இதுநான் திருடாதது. அதற்கு 100 பேரை நான் சாட்சியாகக் கொடுக்கிறேன். நீ இரண்டுபேர்தானே வைத்திருக்கிறாய். நான் 100பேர் வைத்திருக்கிறேன்" என்றார்.

எனவே இப்பொழுது இந்தப்பூமி சொர்க்கம் இல்லை என்று நீங்கள் சொன்னால், நான் 1000 பேரை சாட்சியாகக் கொடுக்கறேன். நீங்கள் ஒரு வேலை செய்யுங்கள். உங்களுக்கு எந்தநேரம் சௌகரியமோ, அந்த நேரத்தை அமைத்துக்கொள்ளுங்கள். ஒருநாளில் ஒரு மணிநேரம். அது வீடாகட்டும், அலுவலகமாகட்டும், வீட்டில் ஆனந்தமாக இருக்க முடியவில்லையென்றால் நீங்கள் ஆபிஸ் போய் இருக்கலாம். ஆபிஸில் இருக்க முடியவில்லை என்றால், ஆபீஸிலிருந்து வீட்டிற்கு வருகிறவரைக்கும் வைத்துக்கொள்ளலாம். எப்படியோ, உங்களுக்கு எப்படி சௌகரியமோ, அப்படி ஒரு மணிநேரம் நீங்கள் கவனமாக, மனப்பூர்வமாக ஆனந்தமாக இருக்கவேண்டும். அப்படிச் செய்யமுடியுமா?

அந்த ஒருமணிநேரத்தில் என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும். "நான் காலையில் ஏழுமணியிலிருந்து எட்டுமணிவரைக்கும் ஆனந்தமாக இருப்பேன். என்னநடந்தாலும் சரி" அப்படிச் செய்யமுடியுமா? அப்படி அமைத்துக்கொள் நங்கள். அந்த ஒரு மணிநேரத்தில் என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும், யார் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும். ஆனால் நாம் ஆனந்தமாக



## ஆன்மீகம் 35

இருக்கவேண்டும்.

ஒரு மணிநேரம் அப்படி இருக்க முடியும் என்றால், அதற்குப்பின்னர் அப்படியே 24மணிநேரத்திற்கும் அதை நீடிக்கவேண்டும் என்ற ஆர்வம் வராதா? அப்படிச் செய்துவிட்டால் எப்போதும் சொர்க்கம் உங்கள் கையில்தானே? சரி, அப்படி வருகிறதோ, இல்லையோ ஆனால் ஒரு மணிநேரம் நீங்கள் அப்படிச்செய்து கொள்ளவேண்டும். இந்தமன அழுத்தம், கோபம், பதற்றம், பயம், இது ஒருமாதிரிப் பழக்கம். அன்பு, ஆனந்தம்,பேரானந்தம் இது ஒரு மாதிரிப் பழக்கம். எதையுமே நாம் பழகிக்கொள்ளமுடியும்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# பெண்ணிலைவாதம் தொடர்பான கோட்பாடுகளின் தோற்றமும் வளர்ச்சியும்

02

பெண்நிலைவாதம் பகுத்தறிவுடையதல்ல என மறுப்போர் அதனை மெய்ப்பிக்க வேண்டுமென எதிர்க்குரல் எழுப்பினார் Mary Wollstone Graft என்பார். கணவரையே முழுவதும் சாராமலும் திருமணம் மட்டுமே பெண்களுக்கு என்பதை மறுத்தும். சமஉரிமை வேண்டியும் 1792ல் Mary Wollstone Graft எனும் பெண்,பெண்உரிமைக்கான கோரிக்கைகளை A vindication of the Rights of women என்ற தம் நூலில் முன்வைத்தார். John Stuart Will (1860-1873) என்பவர் நீதி, அரசியல் சமத்துவம் வேண்டு மென்று அனைத்திலும் பெண்களுக்காக வாதாடினார். இவருடைய பெண்ணடிமைத்தனம் (Subjection of women)என்னும் நூல் பெண்ணியத்திற்கு மேலும் வலுவூட்டியது. பெண்ணடிமைத்தனத்திற்கு குரல் கொடுத்த கோட்பாடாக இருந்தாலும் இதில் பல குறைபாடுகளும் இருக்கத்தான் செய்தது.அவற்றை நோக்குமிடத்து இது ஒரு சீர்திருத்த வாதமாகக் காணப்பட்டது. அதாவது தாழ்வு நிலைகளை அகற்றினால் போது மென்ற கொள்கையுடையது. இது தவறானதாகும். அத்துடன் நீண்டகாலம் போராட வேண்டியதாகவிருந்தது. ஆணாதிக்கம் பற்றிய சிந்தனைகள் இங்கு இடம் பெறவில்லை. இரு பாலாருக்கு மிடையே அடக்குமுறை கூடாது. மானுட வளர்ச்சிக்கு பூரண சமத்துவம் சட்டரீதியாகச் செயலாக்கப்பட வேண்டுமென்பது தாராண்மைவாதப் பெண்ணிலைவாதமாகும். இதில் காணப்பட்ட குறைபாட்டின் காரணமாக மாக்ஸிஸ பெண்ணிலைவாதம் தோற்றம் பெற்றது.

மாக்ஸிஸம் என்பது, 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் முதலாளித்துவத்திற்கு எதிராக தோன்றிய தொழிலாளிவர்க்கத்தின் விடுதலை பற்றிப் பேசுவதே ஆகும். இக்கொள்கையின் மூலகர்த்தா கார்ல்மாக்ஸ் ஆவார். மாக்ஸியக் கொள்கையில் முக்கியமானவை முதலாளித்துவத்தை எதிர்ப்பதும். பொதுவுடமையை வளர்ப்பதுமாகும். பெண்ணடிமை என்பது மாக்ஸியக் கொள்கையில் ஒரு பகுதியே ஆகும். பாட்டாளி வர்க்கப்புரட்சி வெற்றி பெற்றதும் பெண் விடுதலை அடைவாள் என்று மாக்ஸி

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

ஸம் கூறுகிறது. பெண்கள் ஒடுக்கப்படுவது சமூகத்தின் உற்பத்திமுறை மற்றும் உற்பத்தி உறவுகளுடன் (மனித இன உற்பத்தி) தொடர்பு கொண்ட வரலாற்று ரீதியான ஒரு பிரச்சனையே என மாக்ஸிஸம் கூறுகிறது. பெண்களுக்கு குடும்ப அமைப்பில் முக்கிய இடம் ஒதுக்கப் பட்டவுடன் சமூக உற்பத்தியில் பெண்களின் பங்களிப்பு இல்லாமல் போனது. இவ்வேறுபாட்டை உடைத்தெறிவதுதான் பெண்விடுதலைக்கான முதற்படி என ஏங்கல்ஸ் கருதினார். ஒருதார மணமுறை என்பது ஆண்பாலார், பெண்பாலாரை அடக்கி ஒடுக்குவதற்கான பிரகடனம் என்ற கருத்தும் மாக்ஸிஸ பெண்நிலைவாதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளாக அமைந்தன. தந்தை வழிச்சமூகத்தை ஒழிக்கவேண்டும் என்பதையும் அடிப்படையாகக் கொண்டது. இக்கோட்பாட்டில் காணப்பட்ட குறைபாட்டின் காரணமாக சோசலிசப் பெண்நிலைவாதம் தோற்றம் பெற்றது.

சோசலிசப் பெண்ணிலைவாதம் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோற்றம் பெற்றது. இப் பெண்ணிலைவாதம் சமஉரிமை பெறுவதற்காகப் போராடி எழுந்தது. சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் என்னன்ன வேறுபாடுகள் உள்ளதோ அவற்றையெல்லாம் நீக்கப் பாடுபட்டன. தனிநபர் சொத்துருமை கூடாது என வாதிட்டனர். குடும்பம் என்பது உடற்கூறு அடிப்படையில் அமைவதல்ல. மாறாகப் பொருளாதாரக் கூறு அடிப்படையில் உருவானது என்கிறது. வாழ்வைத் திட்டமிட்டுத் தீர்மானித்து வழி நடத்தும் சக்தியே அரசியல் ஆதலால் இச்சக்தி ஆண், பெண் இருபாலாரிடமும் சரியாகப் பகிரப்படவும் பெண் நிர்வாகப் பணிகளிலும் எல்லாத்துறைகளிலும் ஈடுபட்டு மனிதசமுதாய வளர்ச்சிக்காக உழைக்க வேண்டுமென்று அழைப்பு விடுக் கிறது. இவ்வாறு சோசலிசப் பெண்ணிலைவாதம் காணப்படுகின்றது.


இம்மூன்று கோட்பாட்டிற்கும் அடுத்ததாக தீவிரவாதப் பெண்நிலைவாதத்தை விரிவாக நோக்குவதுடன் அதிலுள்ள முக்கியவாதங்கள் பற்றியும் நோக்குவோம்.

தீவிரவாதப் பெண்நிலைவாதமானது 60-70களில் தீவிரமாகச் செயற்பட்டது. பெண், விடுதலை பெறக்காலம் நீடிக்கும் என்ற வெறுப்புணர்ச்சி, மிதவாதப் பெண்ணியத்தை வெறுத்து தீவிரமாகத் தலைகாட்டத் தொடங்கியது. பிரான்ஸ், ஜேர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் இப்பெண்ணியம் மிகவேகமாக வளர்ச்சி பெற்றது. இவர்களுக்கு மிதவாதப் பெண்ணியவாதிகளோடு தொடர்பு இருந்தது. ஆனால் பாலி

**எஸ்.பகீரதி**

யல் ரீதியான அடக்குமுறை புறக்கணிக்கப்பட்டு பாலியல் ரீதியான உழைப்புப் பங்கீடும் பொருளியல் வர்க்க அமைப்பும் முக்கியப்படுத்தப்பட்டபோது, அது சீர்திருத்தமாக அமைந்து போனதால் தீவிரவாதப் பெண்ணிலை வாதிகள் தந்தை வழிச் சமூகத்தை உடைத்தலையே முதன்மை நோக்கமாகக் கொண்டனர். இதன் வேர் உயிரியல்ரீதியான குடும்பமென்பதால் குடும்பத்தையும் உடைக்க விரும்பினர்.

(தொடரும்)





ஆரியகுளம் புதிய உயர் கல்வி நிறுவனத்தில் பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் இரத்தம் வழங்கும் மாணவி ஒருவரை வைத்திய அதிகாரி பரிசோதிப்பதையும் மாணவர்கள் இரத்ததானம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

### நாட்டில் மீண்டும் அடை மழை

## 13 நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் கனமழை பெய்து வருகிறது. தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை காரணமாக நாட்டின் சில நீர்த்தேக்கங்கள் பெருக்கெடுக்கும் மட்டத்தை எட்டியுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக 13 நீர்த் தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக இத்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

அநுராதபுரத்தில் ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் 7 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அம்பாந்தோட் டையில் லுணுகம்வெஹர, முருத் தவெல மற்றும் மங்ஆர நீர்த்தேக் கங்களின் வான் கதவுகள் திறக் கப்பட்டுள்ளன.

குருணாகல் மாவட்டத்தில் அம்பகொலவெவ, ஹக்வடுன மற்றும் மாகால்ல உட்பட 5 நீர்த்தேக்க வான் கதவுகளும் புத்தளத்தில் ஒரு நீர்த் தேக்கத்தின் வான் கதவும் மாத்தளையில் ஒரு நீர்த்தேக்கத்தின் வான் கதவும் திறக்கப்பட்டுள்ளன எனத் தெரிய வருகிறது.

(ஸ்ரீ-2)

## உலகில் புவியீர்ப்பு சக்தி மிகக் குறைவாக காணப்படும் மையமாக இலங்கை உள்ளது

### விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

உலகில் புவியீர்ப்பு சக்தி மிகவும் குறைவாகக் காணப்படும் மையமாக இலங்கை கணிப்பிடப்பட்டுள்ளது.

உலகின் புவியீர்ப்பு சக்தி பிரிந்து செல்லும் பரம்பல் முறை குறித்து அண்மையில் விஞ்ஞானிகள் ஆய்வொன்றை மேற்கொண்டிருந்தனர். அதன்போதே இலங்கையானது மிகவும் குறைந்த புவியீர்ப்பைக் கொண்ட மையமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இலங்கையில் தென் மாகாணமும் அதன் கடலோரப் பகுதிகளுமே கூடுதலான அளவில் புவியீர்ப்பு சக்தி குறைவாகக் காணப்படும் பிரதேசங்களாகும். அதற்கான காரணம் குறித்து விஞ்ஞானிகளால் இதுவரை கண்டறிய முடியாமற் போயுள்ளது.

பொதுவாக கடலோரப் பிரதேசங்களில் அதிகூடிய புவியீர்ப்பு சக்தி காணப்படுவது இயல்பாக இருந்தபோதிலும் தென்னிலங்கையின் கடலோரப் பிரதேசங்கள் அதற்கு எதிர்மாறான பண்பைக் கொண்டுள்ளன.

உலகின் அதிகூடிய புவியீர்ப்பு சக்தி வலயமாக பிரிட்டன் மற்றும் கிரீன்லன்ட் தீவுகளுக்கிடையிலான கடல் பகுதி காணப் படுவதுடன் அங்கு 60-100 வரையான மிலிகல் (புவியீர்ப்பு சக்தி அளவீடு) புவியீர்ப்புச் சக்தி நிலவுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

அதே நேரம் தென்னிலங்கையிலிருந்து புவியீர்ப்பு சக்தியான மறைபெறுமதியில் 60-120 அளவில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலைய ஆண்டுப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர் கேட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

## ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கையை முறியடிக்க நல்லிணக்க ஆணைக்குழுவை பயன்படுத்த வேண்டும்

### முன்னாள் இராஜதந்திரிகள் அரசை வலியுறுத்து

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கையை முறியடிப்பதற்கு உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவினை பயன்படுத்த முடியும் என சில ஓய்வுபெற்ற முன்னாள் இராஜதந்திரிகள் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

கால நேரத்தை விரயம் செய்யாது உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு வின் அறிக்கை வெளியிடப்பட வேண்டுமென வலியுறுத்தித் தப்பட்டுள்ளது.

நிபுணர்குழு அறிக்கையை தோற்கடிக்கும் வகையில் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் அறிக்கை வெளியிடப்பட வேண்டுமென முன்னாள் சிரேஷ்ட இராஜதந்திரி ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் இலங்கைக்கு ஆதரவளிக்கும் என்ற போதிலும் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிரான கருத்துக்களை இலங்கை சுயாதீனமான முறையில் முன் வைக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

ஏனைய நாடுகளின் உதவிகளைப் பெற்றுக் கொள்வது பொருத்தமாகாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொறுமையாகவும் நிதானமாகவும் அரசாங்கம் செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச சமூகங்களுடன் வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்திக் கொள்வதனை விடவும் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வு காண்பதே சாலச் சிறந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக ஒரு மில்லியன் கையொப்பங்கள் திரட்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவது புத்தி சாதுரியமான தீர்வாக அமையாது என ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான முன்னாள் இலங்கை வதிவிடப் பிரதிநிதி நிஹால் ரொட்ரிகோ தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் நாட்டில் அபாயகரமான சக்திகள் செயற்பட்டு வருவதாக அர்த்தப்படும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

(ஸ்ரீ-2)


சேவையால் உயர்ந்தோனுக்கு

உயர்திரு வே.தி.செல்வரத்தினம்

அவர்கள் ஆசிரியராக, அதிபராக வடமராட்சி கோட்டக்கல்விப் பணிப்பாளராக, வலயக் கல்விப் பணிப்பாளராக, யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பணிசெய்து கல்விப் புலத்தினரதும் பொதுமக்களினதும் நன்மதிப்புக்களையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ள தாங்கள் தற்சமயம் வடமாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராகப் பதவியுயர்வு பெற்றுள்ளமையையிட்டு உளமாரப் பாராட்டுவதோடு, மேலும் பல பதவிகள் பெற்று நோய் நொடியின்றி நூறாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல இறையருளை வேண்டி நிற்கின்றோம்.



(சி-3062)

திரு. ஆ.வடிவேலு (ஓய்வு பெற்ற அதிபர்), திரு. ஆ.மகேசு (ஓய்வு பெற்ற அதிபர்), திரு. மகேசு பங்கயன் (ஆசிரியர்), செல்வி மகேசு வனஜா (ஆசிரியை).

தும்பளை, பருத்தித்துறை.



பாராட்டும் வாழ்த்துக்களும்

உயர்திரு வே.தி.செல்வரத்தினம் (S.L.E.A.S.I)



கருமமே கட்டைக் கல்லாக சேவையாற்றி வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் பதவியை அலங்கரிக்கும் பெருமைக்குரிய, எம் பெருமதிப்பிற்கும் அன்பிற்குமுரிய உயர்திரு வே.தி. செல்வரத்தினம் (S.L.E.A.S.I) அவர்களின் சேவை சிறக்க நல்ல தேகாரோக்கியத்துடன் நீடூழி வாழ இறையருள் ஆசியை வேண்டி பெருமகிழ்வுடன் பாராட்டி வாழ்த்தும் இவர்கள்:


அதிபர், ஆசிரியர்கள்,
யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்,
கரணவாய் மத்தி, கரவெட்டி.
தொ.பே: 0777 178161

(சி-3064)

# இலங்கை கடற்படையே தமிழக மீனவர்களைக் கொன்றது

## மரணமான மீனவர் குடும்பங்களுக்கு ஆறுதல் கூறினார் வை.கோ

உலகக் கோப்பையை இந்தியாவிடம் இழந்த ஆத்திரத்தில், தமிழக மீனவர்கள் நால்வரின் உயிரைப் பறித்துவிட்டது இலங்கைக் கடற்படை! என்று எழுந்த குற்றச்சாட்டு குறித்து, கடந்த 17.04.2011 இதழில் எழுதி இருந்தோம். விக்டஸ் என்ற மீனவர் உடல் மட்டும் இலங்கையில் கரை ஒதுங்கிய நிலையில், மற்ற மீனவர்களின் உடல்கள் குறித்து எந்தத் தகவலும் கிடைக்காமல் இருந்தது. இந்த நிலையில் கடந்த 1 2 ஆ ம் தி க தி அந்தோணிராஜ் உடலும், 14ஆம் திகதி கை துண்டிக்கப்பட்ட நிலையில் ஜான்பால் உடலும் கிடைத்தன. இரண்டு நாட்கள் கழித்து தலை துண்டிக்கப்பட்ட நிலையில் மாரிமுத்து உடலும் தொண்டி கடலோரப் பகுதியில் கரை ஒதுங்கியது. அதாவது கொன்று, கொண்டுவந்து போட்டுள்ளார்கள். சூடு குறையாத நேரத்தில் பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களை சந்தித்து ஆறுதல் கூற தங்கச்சிமடம் வந்திருந்தார் வை.கோ.



பாதிக்கப்பட்ட குடும்பத்தினருடன் வை.கோ

முதலில் விக்டஸின் வீட்டுக்குச் சென்றார். விக்டஸின் மனைவி கிங்ஸ்டாவும், அவரது மூன்று வயது மகள் பெரிலும் கதறி அழ, வை.கோவின் கண்களிலும் கண்ணீர். உயிரைப் பணயம் வைத்து உழைத்தாலும், அதன்மூலம் கிடைக்கும் கஞ்சியைக்கூட நிம்மதியாகக் குடிக்க முடியாத நிலையில் நம் மீனவர்கள் உள்ளனர். நாம் எவ்வளவுதான் போராட்டம் நடத்தினாலும், நம் மீனவர்களை சிங்களம் கொன்றுகொண்டே இருக்கிறான். உங்களுக்கு ஏற்பட்ட இழப்பை யாராலும் ஈடு கட்ட முடியாது. ஆனாலும் என்னால் முடிந்த சிறு உதவி என சொல்லி 25ஆயிரத்தை விக்டஸின் மகளிடம் கொடுத்தார்.

அடுத்து ஜான்பால் வீட்டுக்குச் சென்றார் வை.கோ. ஜான்பாலுக்கு நான்கு குழந்தைகள் அடுத்தடுத்த ஆண்டுகளில் பிறந்துள்ளன. யாருமே இன்னும் ஐந்து வயதை எட்டவில்லை. எதுவுமே அறியாத அந்தக் குழந்தைகள் சூழல் புரியாமல் அப்பாவுக்கு காரியங்களைச் செய்து கொண்டு இருப்பதைக் கண்ட வை.கோ கண்கள் சிவக்க, அந்தக் குழந்தைகளைத் தூக்கி அணைத்து கண்ணீர் விட்டார். இந்த நெகிழ்வு அங்கு கூடியிருந்த பெண்களையும் தொற்றிவிட, அனைவரும் வாய் விட்டு அழுதனர். ஜான்பாலின் மனைவி ஜெனிட்டா வுக்கு ஆறுதல் கூறிய வை.கோ, அவரிடமும் நிதி அளித்தார்.



உயிரற்ற அந்தோணி ராஜ்... தலை துண்டிக்கப்பட்ட மாரிமுத்து! கை இல்லாத ஜான்பால்...

இறுதியாக அந்தோணிராஜ் வீட்டுக்குச் சென்ற வை.கோவிடம் சகாயம் என்ற பெண், காலங்காலமா கடலை நம்பியே வாழுற எங்க புள் ளைங்களோட கதியைப் பாத்தீங்களா? இலங்கைக்காரன் கொன்னு போட்ட நாலு பேரோட குடும்பத்தைப் பாருங்க. புருஷனைப் பறி[illegible]காடுத் துட்டு நிக்கிற எங்க புள்ளைகளைப் பாருங்க அய்யா. இந்த கொடுமைக்கு எப்பத்தான் முடிபு வருமோ... என்று கதறினார். 19 வயதில் கணவனை இழந்த சோகத்தையும், தனது இரண்டு வயது மகள் ரிமிலாவின் எதிர்காலத்தையும் நினைத்துச் சுருண் டுகிடந்த அந்தோணிராஜின் மனைவி சாலியோடவிடம், உங்களுடைய துக்கத்திலும் கண்ணீரிலும் பங்கெடுக்கவே வந்து இருக்கிறேன். நீங்கள் தைரியமாக இருக்க வேண்டும். வேலைக்குப்போன அப்பா திரும்பி வருவார் என நினைத்துக் கொண்டு இருக்கும் இந்தக் குழந்தையினை நன்றாகப் படிக்க வையுங்கள். காலம்தான் என் கண்ணீரைத் துடைக்கும் என்ற வை.கோ, அவருக்கும் 25 ஆயிரத்தை வழங்கினார்.

அப்போது சாலியோ ப்ளஸ் டு படிச்சிருக்கு. அவளுக்கு டீச்சர் டிரெய்னிங் படிக்க ஏற்பாடு செஞ்சா அவ வாழ்க்கைக்கு உதவியா இருக்கும் என சிலர் சொன்னார்கள். உடனடியாக அதனை ஏற்றுக்கெண்ட வை.கோ, இப்போதே அதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று, டீச்சர் டிரெய்னிங் ஸீட் வாங்குவதற்கான நன்கொடை, படிப்புச் செலவு அனைத்தையும் தானே ஏற்றுக் கொள்வதாக அறிவித்தார் வை.கோ.

கண் கலங்கி நின்ற வைகோ, நம் மீனவர்கள் தாக்கப்படும்போது எல்லாம், இந்திய பிரதமரின் கவனத்திற்கு நேரடியாகவும், கடிதம் மூலமும் கொண்டுசெல்வேன். அவரும் இனி அப்படி நடக்காது என பதில் அளிப்பார். ஆனால் மறுநாளே

**ஜூனியர் விகடன்**

நம் மீனவர்கள் சிங்களர்களால் தாக்கப்படுவார்கள். 30 வருடங்களாக இந்தத் தாக்குதல் நடந்துகொண்டே இருக்கின்றன. இலங்கை அரைசக் கண்டித்தோ, ராஜ்ய உறவுகளைத் துண்டிப்போம் என்றோ இந்திய அரசு எச்சரித்தது இல்லை. மாறாக இலங்கை ஜனாதிபதி கொமன்வெல்த் போட்டிக்கும், கிரிக்கெட் போட்டிக்கும் அழைத்து மரியாதை செய்கிறார்கள். திருப்பதியில் பூரண கும்ப மரியாதை கொடுக்கிறார்கள். இந்தியாவில் இருந்து அன்றைய இரவில்தான் இந்தக் கொடூரச் சம்பவம் நடந்து இருக்கிறது. இந்திய அரசு... தமிழர்களுக்கும் தமிழக மீனவர்களுக்கும் துரோகம் இழைத்து வருகிறது என்று கொந்தளித்தார். இதுவே, இறுதி நிகழ்வாக இருக்கட்டும்!

*இரா.மோகன்*

# 97 வைத்தியசாலைகளை மீள செயற்படுத்த நடவடிக்கை

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

மருத்துவர்களுக்கான பற்றாக்குறை காரணமாக மூடப்பட்ட 97 வைத்தியசாலைகளை மீண்டும் திறக்க முயற்சி மேற்கொள்ளப்படுவதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 80 வைத்தியசாலைகளும், நுவரெலியா மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த 17 வைத்தியசாலைகளுமே தற்போது இயங்காத நிலையில் உள்ளதாக குறிப்பிட்டார்.

இந்த நிலையில் அடுத்த வருடம் அளவில் புதிதாக 270 மருத்துவர்களை நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# பாடசாலை நேரத்தில் மாணவர்களை தடுத்து வைத்திருப்போருக்கு எதிராக நடவடிக்கை

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை நேரத்தில் மாணவர்களை ஏற்றிச்செல்லும் வாகனங்களில் அவர்களைத் தடுத்து வைத்திருப்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இன்று தொடக்கம் பாடசாலை தவணைக் காலம் ஆரம்பமாகும் நிலையில் இந்த நடைமுறையை அமுல்படுத்தவுள்ளதாக அதிகாரசபையின் தலைவர் அனோமா திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாடசாலை நேரங்களில் அவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களில் மாணவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அவர்கள் பலதரப்பட்ட இன்னல்களுக்கு முகம் கொடுப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# அரசாங்கத்தின் செயற்பாடுகள்

# பொருளாதார தடையை ஏற்படுத்திவிடும்

## ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

**புரையோடி போயுள்ள வடக்கு- கிழக்கு பிரச்சினைக்கு இலங்கை தீர்வுகாணாது போனால் எதிர்காலத்தில் பொருளாதார தடைகள் கூட விதிக்கப்படலாம் என ஐ. தே.க.பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.**

வடக்கு- கிழக்கில் வாழும் மக்களும்ஏணைய பிரதேசமக்கள்போன்று தலைநிமிர்ந்து கௌரவமான மனிதர்களாக வாழும் வகையிலான சூழலை ஏற்படுத்த வேண்டும் எனவும் அதற்கு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப் பட்டுள்ள சில விடயங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்துகின்றார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச சமூகத்தினால் அப்படியான பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டால் அதனால் பாதிக்கப்பட போவதும் அப்பாவி மக்கள்தான்.

நிபுணர் குழுவின் அறிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ள போதிலும் இதற்கு முன்னர் அந்த குழுவை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் சந்தித்துள்ளதன் மூலம் அதனை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இலங்கை இராணுவம் உலகில் மிகவும் பயங்கரமான அமைப்பான விடுதலைப்புலிகளுடன் போரிட்டது. இதனால் அனைத்து நடவடிக்கைகளும் நடைமுறைச் சட்டத்திட்டங்களின் பிரகாரம் நடக்க வாய்ப்பில்லை. விடுதலைப்புலிகள் செயற்பாடுகள் குறித்தும் நிபுணர் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஆரம்பத்தில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்ட போது உள்ளக மட்டத்திலான விசாரணை ஒன்றை நடத்தி இறுதிக்கட்ட போரில் என்ன நடந்தது என்பதை அரசாங்கம் உலகத்திற்கு எடுத்துக் கூறியிருந்தால் இன்றைக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது என்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

(ச-5)

## இன்று சர்வதேச மலேரியா தினம்

சர்வதேசமலேரியா தினம் இன்று நினைவு கூரப்படுகிறது.

வருடாந்தம் உலகம் முழுவதும் 10 இலட்சம் வரையானவர்கள் மலேரியா தொற்று காரணமாக உயிரிழப்பதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

இதில் பெரும்பாலும் 5 வயதுக்குக் குறைவான சிறார்களே பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

101 நாடுகளைச் சேர்ந்த மில்லியன் கணக்கிலான மக்கள் மலேரியா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் வருடாந்தம் 450 இற்கும் அதிகமான மலேரியா நோயாளர்கள் இனங்காணப்படுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

(ஸ்ரீ-2)

# குற்றப்பழியை ஏற்க நேரிடுமென்ற அச்சமே இந்தியாவின் மௌனத்திற்கான காரணம்

## ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக பேராசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கையின் ஒரு பகுதி அதிகாரபூர்வமற்ற வகையில் வெளியாகியுள்ள போதும் இந்தியா இது குறித்து மௌனம் காத்தே வருகின்றது.

இந்த அறிக்கை தொடர்பாக இந்தியா ஏதாவது ஒரு கருத்தினை முன்வைப்பின் இறுதிக்கட்ட போரின் குற்றப்பழி தன் மீதும் வந்துவிடும் என்ற அச்சமே இதற்கான காரணமென புதுடில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் தெற்காசியவியல் துறை பேராசிரியர் பி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் மற்றும் தமிழக அரசுக்கும் இடையில் ஒரு நெருக்கமான நட்பு நிலவுகின்றது. இந்த நட்பை முறித்துக் கொள்ள இரு நாடுகளும் விரும்பவில்லை. இதனாலேயே இந்தியா-இலங்கை மீது போர்க்குற்றம் தொடர்பான விடயத்தில் மௌனம் காத்து வருகின்றது.

இதேநேரத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுத் திட்டமொன்றை இலங்கை கொண்டு வருவதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஒன்றை தமிழ் நாட்டிலிருந்து எழக்கூடிய அழுத்தங்கள் ஏற்படுத்தலாம் என்றும் அது இந்திய அரசாங்கத்திற்கு ஒரு தர்ம சங்கடமான நிலைமை உருவாக வாய்ப்புள்ளது.

ஏனென்றால் இந்தியா இதுவரை இலங்கையுடன் எல்லாவிடயத்திலும் ஆதரவாக இருந்திருக்கின்றது. இலங்கைக்கு எதிராக ஒன்றையும் செய்யக்கூடாது என்ற நிலைப் பாட்டைக் கொண்டிருக்கிறது.

அதேசமயம் அழுத்தம் ஏற்படுமானால் இந்தியா அதற்கு ஏதாவது பதில் சொல்ல வேண்டிய நிலை ஏற்படும். மௌனம் காக்க முடியாது.

எது எவ்வாறு இருப்பினும் பிராந்தியத்தில் இலங்கை வேறு நட்பு நாடுகளையும் கொண்டிருக்கின்ற நிலையில் இலங்கை மீது நேரடியாக ஓர் அழுத்தத்தைக் கொடுத்து உறவில் கசப்புணர்வுகளை ஏற்படுத்திக் கொள்ளும் நிலையிலும் இந்தியா இல்லை என்பதையும் பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனக்கு என்ன சந்தேகம் என்றால் இந்தியாவைப் பொறுத்தவரையில் இலங்கை விடயத்தில் கொள்கை ரீதியான எந்த நிலைப் பாட்டையும் எடுக்கவில்லை.

இது வரைக்கும் அங்கு அட்டூழியங்கள் நடந்தது என்றோ நடக்கவில்லை என்றோ திட்டவட்டமான ஒரு கருத்தை இந்தியா சொல்லவில்லை.

இது ஐ.நா. சபையில் இன்றுவரை பிரச்சினையாகவே இருந்து வருகின்றது. அந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியா ஐ.நா. அறிக்கையை அங்கீகரிக்குமா? அப்படி அங்கீகரித்தால் இலங்கை- இந்திய நட்புக்கு என்ன ஆகும்.

இலங்கையின் இறுதிக்கட்ட போரின் போது இடம்பெற்ற குற்றங்கள் என திட்டவட்டமாக கூறப்படுமானால் அந்தத் தவறுக்கான பழி மற்றும் கெட்ட பெயர் இந்தியா மீதும் வர வாய்ப்புள்ளது. ஆகவே அதுவே பிரச்சினை.

அத்துடன் இலங்கை அரசாங்கம் இந்தியா சொல்வதைக் கேட்பதில்லை. ஏனெனில் இலங்கை அரசுக்கு வேறு பல நட்பு நாடுகள் இருக்கின்றன.

இவை எல்லாவற்றையும் வைத்துப் பார்க்குமிடத்து இந்தியா இந்த விடயத்தில் சுதந்திரமாக முடிவெடுக்குமா என்பது சந்தேகமே என்றார்.

(ஸ்ரீ-2)

# வீட்டோ அதிகாரமுடைய நாடுகளுக்கு ஜனாதிபதி விஜயம் செய்ய வேண்டும்

## ஹெல உறுமய கோரிக்கை

(கொழும்பு)


ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு தனிப்பட்ட விஜயங்களை மேற்கொள்ள வேண்டுமென ஜாதிகஹெல உறுமய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

வீட்டோ அதிகாரமுடைய ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு ஜனாதிபதி நேரடியாக விஜயம் செய்து இலங்கைக்கு எதிரான சர்வதேச அழுத்தங்களை முறியடிப்பதற்கான ஆதரவினை திரட்ட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் தமது நிலைப்பாட்டை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு உத்தியோக பூர்வமாக அறிவிப்பதற்கு தீர்மானித்துள்ளதாகஜாதிகஹெலஉறுமயகட்சியின்சட்டஆலோசகர் உதய கம்மன்பில் தெரிவித்துள்ளார்.

நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் குறித்த நாடுகளுக்கு ஜனாதிபதி விளக்கமளிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையில் மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற முனைப்பு காட்டினால் அதற்கு எதிராக ஏன் வாக்களிக்க வேண்டும் என்பதனை சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு ஜனாதிபதி விளக்கமளிக்க வேண்டுமென தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)





முல்லைத்தீவு பஸ் டிப்போவிற்கு கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் அண்மையில் விஜயமொன்றை மேற்கொண்டார். கடந்த கால யுத்தத்தின் போது முற்றாக சேதமடைந்த பஸ் டிப்போ கட்டடத்தையும் அமைச்சர் கொண்ட குழுவினர் பார்வையிடுவதையும் அருகில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் மற்றும் முல்லைத்தீவு பிரதேச செயலாளர் எஸ்.தயானந்தா நிற்பதையும் படங்களில் காணலாம்.

# சிரிய ஜனாதிபதிக்கு எதிராக கிளர்ச்சி; இராணுவத்தினர் சூட்டதில் 49 பேர் பலி



(பெய்ருட்)

சிரியாவில் அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பாதுகாப்புப் படை யினர் நடத்திய தாக்குதலில் 49 பேர் கொல்லப் பட்டுள்ளனர்.

சிரியாவில் கடந்த 40 ஆண் டுகளாக சர்வாதிகார ஆட்சி நடை பெறுகிறது. கடந்த 11 ஆண்டுகளு க்கு முன்பு பஷார் ஆசாத் தனது தந்தையிடமிருந்து ஜனாதிபதி பதவியை கைப்பற்றினார். இந்த நிலையில் ஆசாத் பதவி விலகக் கோரி கடந்த ஒரு மாதத்துக் கும் மேலாக போராட்டம் நீடிக்கிறது. குறிப்பாக ஆர்ப் பாட்டக் காரர்கள் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் ஜனாதிபதிக்கு எதிராக கோஷம் எழுப்பி பேரணி நடத்தி வருகின்றனர்.

தலைநகர் டமாஸ்கஸ், டாரா, ஹமா, ஹாம்ஸ், லடாகியா உள்ளிட்ட பல நகரங் களில் கடந்த வெள்ளிக்கிழமையன்றும் பேரணி நடைபெற்றது. ஆர்ப்பாட்டக் காரர்களை கலைப்பதற்காக பாதுகாப்புப் படையினர் கண்ணீர் புகை குண்டுகளை வீசியதுடன் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 49 பேர் கொல்லப்பட்ட தாக தகவல்கள் கூறுகின்றன.

இதுவரையில் நடைபெற்ற போராட்டங் களில் சுமார் 250 பேர் கொல்லப்பட்டுள்ளதாக சிரியா மனித உரிமை அமைப்பின் தலைவர் அம்மர் குரபி தெரிவித்துள்ளார்.

சர்வாதிகாரியான ஆசாத் ஆட்சியில் பத்திரிகை சுதந்திரம், தனிமனித சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் எதுவுமே இல்லை என அவர் குற்றம் சாட்டியுள்ளார். (ஸ்ரீ)

# ஜப்பானில் தொடரும் நிலநடுக்கம் மக்கள் மனரீதியாகப் பாதிப்பு

ஜப்பான் நாட்டில் கடந்த மாதம் ஏற்பட்ட பயங்கரவாத சுனாமிக்குப் பின் தொடர்ந்து 400 முறை ஏற்பட்ட நிலநடுக்கத்தால் மக் கள் மனரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஜப் பானை கடந்த மார்ச் 11 ஆம்திகதி 9.0 ரிக்டர் அளவில் ஏற்பட்ட பயங்கர சுனாமி புரட்டிப் போட்டது. இதற்குப் பின் கடந்த 40 நாட்க ளில் 5.0 ரிக்டர் அளவில் 400 முறை ஏற் பட்டுள்ள நிலநடுக்கம், அந்நாட்டு மக்களை மனரீதியாகப் பாதித்துள்ளது.

புகுஷிமா டாய்ச்சி அணுஉலை கதிர் வீச்சைக் கட்டுப்படுத்த ஊழியர்கள் திணறி வரும் நிலையில் தொடர் நிலநடுக்கம், பணி யைப் பெரிய அளவில் பாதித்துள்ளது ஒவ் வொரு முறை நிலநடுக்கம் ஏற்படும் போது இன்னும் அணு உலை கதிர்வீச்சு அபா யத்தை ஏற்படுத்துமா? கதிர்வீச்சு தாங்கிய புதிய மேகம் நகர்ந்து வருமா? என்ற கேள்வி மக்கள் மனதில் எழுகிறது.

சில நேரங்களில் நிலநடுக்கம் இல்லாத போதும் நிலம் அதிர்வதை போல மரக் கிளைகள் அசையும் போது நிலநடுக்கம் வரு வதை போன்ற பயத்தில் உறைந்துள்ளனர்.

அமெரிக்காவைச் சேர்ந்த புவியியல் ஆரா ய்ச்சியாளர் ரோஸ் எஸ்.ஸ்டெயின் ஜப்பானில் நடத்திய ஆய்வுக்குப் பின் கூறுகையில், அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்படுவது அதி கரித்து வருகிறது.

இது தொடர்ந்து ஐந்து அல்லது 10 ஆண் டுகளுக்கு நீடிக்கும் என்கிறார். மார்ச் 11 ஆம் திகதிக்கு பின் அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற் படுவது குறைந்துள்ளது. தொடர்ந்து குறை யும். ஆனால் சாதாரண நிகழ்வை விட அதி களவில் நீண்ட நாட்களுக்கு நீடிக்கும் என்று புவியியல் அறிஞர்கள் கருத்து தெரிவித்துள் ளனர். (ஸ்ரீ-2)

# பொதுமக்கள் படுகொலை பான் கீ மூன் கண்டனம்

(நியூயோர்க்)

சிரியாவில் கடந்த 22 ஆம் திகதி அரசுப் படைகளால் 49 இற்கும் மேற்பட்ட பொதுமக் கள் கொல்லப்பட்டதற்கு ஐ.நா.பொதுச்செய லாளர் பான் கீ மூன் கண்டனம் தெரிவித் துள்ளார்.

சிரிய அமைதியான முறையில் போரா டும் தனது மக்கள் மீது வன்முறையை பிர யோகிப்பதை முதலில் நிறுத்த வேண்டும் என்று பான் கீ மூன் வலியுறுத்தினார்.

நடைபெற்ற படுகொலைகள் குறித்து வெளிப்படையான, சுதந்திரமான விசாரணை நடத்தவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டதாக ஐ.நா.வின் செய்தித் தொடர்பாளர் பர்ஹான் ஹக் தெரிவித்தார்.

சிரிய அரசு சர்வதேச மனித உரிமை களை மதித்து நடப்பதுடன் மக்களின் நியாய மான கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்க வேண் டும் என்று பான் கீ மூன் கூறியதாகவும் பர் ஹான் தெரிவித்தார். பத்திரிகைச் சுதந்திரத் தையும் சிரிய அரசு மதித்து நடக்க வேண்டும் என்று பான் கீ மூன் தெரிவித்ததாக அவர் கூறினார்.

இதற்கிடையில் உலகின் பல்வேறு நாடு களின் தலைவர்களும் இந்தப் படுகொலை குறித்து கண்டனம் தெரிவித்துள்ளனர். அமெரி க்க ஜனாதிபதி பராக் ஒபாமா இத்தகைய வன்முறைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண் டும் என்று தனது அறிக்கையில் தெரிவித் துள்ளார்.

மக்களின் போராட்டங்களை ஈரானின் உதவியுடன் சிரியா நசுக்குவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இந்தப் படுகொலைகளுக்கு காரணமான வர்கள் கண்டறியப்பட்டு நீதியின் முன் நிறுத் தப்படவேண்டும் என்று பிரான்ஸும் தனது கண்டன அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது. (ஸ்ரீ-2)

# இளவரசர் வில்லியம் - கேத் மிடில்டன் கோலாகல திருமணம் லண்டனில்



இங்கிலாந்து இளவரசர் சார்ல்ஸ்-டயானா தம்பதியின் மூத்த மகன் இளவரசர் வில்லி யம் எதிர்வரும் 29 ஆம் திகதி கேத் மிடில்டன் என்ற பெண்ணை திருமணம் செய்யவுள்ளார்.

இளவரசர் வில்லியம் செயின்ட் ஆண்ட் ரூஸ் பல்கலைக்கழகத்தில் படித்தபோது தான் முதன் முதலாக கேத்மிடில்டனை சந்தித்தார். அப்போது இருந்தே இவர்கள் இருவரும் காத லிக்க தொடங்கினர்.

கேத் மிடில்டனுக்கு 29 வயதாகிறது. இவர் வில்லியம்ஸைவிட 5 மாதங்கள் மூத்தவர். இவர்களது திருமணம் லண்டனில் உள்ள பழமையான வெஸ் மினிஸ்டர் அபே தேவா லயத்தில் நடைபெற உள்ளது.

இங்கிலாந்து அரச குடும்பத்தின் வாரி சான இளவரசர் வில்லியம்- கேத் மிடில்டன் திருமணத்தையொட்டி இங்கிலாந்து நாடு விழாக்கோலம் பூண்டுள்ளது.

திருமண நிச்சயதார்த்தத் தின் போது தனது தாய்யா னாவின் வைர மோதிரத்தை கேத் மிடில்டனுக்கு இளவரசர் வில்லியம் அணி வித்தார்.

இளவரசர் வில்லியம்-கேத் மிடில்டன் திருமணத்தில் பங்கேற்க 1900பேர் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட் டுள்ளனர்.

அரச குடும்பத்து திரு மணங்களில் பட்டத்து இளவ ரசர்கள் மட்டுமே பங்கேற்க அழைப்பு அனுப்பப்படும். காமன்வெல்த் அமைப் பில் உள்ள 54 நாட்டு தலைவர்களுக்கு அழைப்பு இல்லை.

அதே போன்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, பிரான்ஸ் ஜனாதிபதி நிகோலஸ் சார்கோஷி ஆகியோருக்கும் அழைப்பு அனுப் பப்படவில்லை. இந்த திருமணத்திற்கு வருகை தரும் பிரபலங்களில் 600 பேர் இங்கிலாந்து ராணி எலிசபெத்துடன் புதிய விருந்தில் பங் கேற்கின்றனர். இளவரசர் சார்ல்ஸ் வழங்கும் விருந்து நிகழ்ச்சியில் 300பேர் கலந்து கொள்கின்றனர். இளவரசர் வில்லியம்-கேத் மிடில்டன் திருமணத்தை உலகெங்கும் உள்ள மக்கள் அனைவரும் கண்டுகளிக்க வசதியாக லண்டனை சேர்ந்த பி.பி.சி. தொலைக்காட்சி நிறுவனம் அன்று மதியம் 12.30 மணி முதல் வண்ணையுடன் நேரடி ஒளிபரப்பு செய்கிறது. யு- டியூப் இணைய தளத் திலும் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது. (ஸ்ரீ)




# ஏமன் ஜனாதிபதி பதவி விலகுவதாக அறிவிப்பு

ஜனாதிபதி அலி அப்துல்லா கடந்த 32 ஆண்டுகளாக ஏமனை ஆட்சிசெய்துவந்தமை குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொள்ளக் பட்டகடுமையானபோராட்டங்களைத்தொடர்ந்து ஜனாதிபதி பதவி விலகத் தீர்மானித்துள்ளார்.

எதிர்வரும் 30 தினங்களுக்குள் ஆட்சிப் பொறுப்பை வேறு தரப்பினரிடம் ஒப்படைக்கத் தயார் என அவர் அறிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு அராபிய நாடுகளினால் முன்வைக்கப்பட்ட யோசனைத் திட்டத்தை ஏமன் அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதா கத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு மாதங்களாக அரசாங்கத் திற்கு எதிராக நடைபெற்ற போராட்டங்களில் குறைந்தபட்சம் 120 பேர் கொல்லப்பட்டனர்.

ஏமன் ஜனாதிபதியின் இந்தத் தீர்மானத் திற்கு அமெரிக்கா பூரண ஆதரவளித்துள் ளது. இந்தத் தீர்மானம் வரவேற்கத்தக்கது எனவும் அமைதியான முறையில் அதிகார மாற்றம் நடைபெறவேண்டும் எனவும்வெள்ளை மாளிகை வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி அலி அப்துல்லா மற்றும் அவரது குடும்பத்தினர் மேற்கொண்ட குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டுமென எதிர்க்கட்சியினர் வலியுறுத்தி வருகின்றனர்.

ஜனாதிபதி குடும்பம் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படுவதிலிருந்து தப்பிக் கக் கூடாது என வலியுறுத்தியுள்ளனர். (ஸ்ரீ-2)



ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில், அந்நாட்டு ஜனாதிபதி டிமிட்ரி மெத்வதேவ்வை (வலது), ஐ.நா.பொதுச்செயலர் பான் கீ மூன் சந்தித்து கலந்துரையாடுவதை படத்தில் காணலாம்.

அன்பு வழியில் ஆண்டவனின் பக்தியில் ஈடு படுங்கள். உங்கள் குழப்பங்கள் யாவும் மறைந்து விடும். *- சத்ய சாய்பாபா*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## வானுறையும் தெய்வமாகிவிட்ட பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா

பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா அவர்கள் நேற்றைய தினம் ஜீவமுக்தி அடைந்துவிட்டார் என்ற செய்தி, உலகம் முழுவதிலும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

புட்டபர்த்தியில் இருந்து ஆன்மிக ஆட்சி புரிந்த நடமாடும் தெய்வமாக விளங்கிய பகவானின் ஜீவமுக்தி இந்த பிரபஞ்சத்தின் உட்பொருளை உணரத் துடிக்கும் மனுக்குலத்திற்குப் பேரிழப்பாகும்.

இந்த நூற்றாண்டின் மிகப்பெரும் அருட்சக்தியாக - தெய்வசக்தியாக விளங்கிய பகவான் மனித சமூகத்திற்கு ஆற்றும் பணியே மகேசன் பணி என்பதை நிரூபித்துக் காட்டியவர்.

அதேசமயம் மனிதர்கள் தெய்வமாகலாம் என்பதை நிரூபித்த மகானும் அவரே.

அவரால், அவரின் நாமத்தால் இலட்சோப இலட்ச மக்கள் வாழ்கிறார்கள் என்ற உண்மையொன்றே அவரிடம் இருக்கின்ற தெய்வசக்திக்கு அடையாளமாகும்.

பகவான் சத்ய சாய்பாபாவின் நாமத்தை உச்சாடனம் செய்வோர், தங்கள் உடல், பொருள், ஆவி அத்தனையும் பகவானுக்கே என்று அர்ப்பணித்தோர், மக்கள் சேவையில் ஈடுபட்டோர், பகவானின் போதனையைச் சிரமேற்கொண்டு செயற்படுவோர், தானதர்மம் செய்வோர் என ஏதோவொரு வகையில் மனித வாழ்வை பகவான் ஆற்றுப்படுத்தினார்.

இதன்காரணமாகவே பாரதத்தில் இன்றும் ஆன்மிக ஊற்று பெருக்கெடுத்து ஓடுகிறது எனலாம்.

உலக அமைப்பும் பிரபஞ்சப் படைப்பும் மனிதப் பிறப்பும் மானிடத்தைத் தெய்வீகத்தின்பால் வழிப்படுத்த காலத்திற்குக் காலம் மனித உருவில் அவதாரம் எடுக்கும் ஞானிகள் பற்றிய உண்மைத்தன்மைகளுக்கு பகவானின் அவதாரம் நல்லதோர் எடுத்துக்காட்டு.

இன்றைய உலகம் நவீன தகவல் தொழில் நுட்பத்தை தம் வாழ்வின் பிறழ்வுக்காகப் பயன்படுத்திவரும் வேளையில், ஆன்மிக சிந்தனையும் இறைநம்பிக்கையும் அவசியப்படும் வேளையில், பகவான் இந்த உலகை விட்டுச் சென்றுவிட்டார் என்ற நினைப்பு எம்மை வாட்டவே செய்கிறது.

ஸ்ரீ சத்ய சாய்பாபா அவர்கள் ஜீவமுக்தி அடைந்திருந்தாலும் அவர் இந்த உலகை வழிப்படுத்துவார் என்பதில் எந்த ஐயுறவுமில்லை. அவரின் புனித ஆத்மாவின் திருவருள் இந்த உலகிற்குக் கிடைக்கும் என்ற அசையாத நம்பிக்கையோடு அவரின் போதனையைப் பின்பற்றுவதே மானிடத்தின் கடமையாகும்.

# சாயி தெய்வம் சமாதியுற்றதோ!



இறைவன் ஒருவனே, அன்பே இறைவன், இறைவனே அன்பு எனப் புரிய வைக்க தன்னுலகை விண்ணுலகாக மாற்றம் பெற, மனித உடல் தாங்கி நடமாடிய, அடியும், நுனியும் காணப்பெறா, அண்டம் எல்லாம் பரந்ததெய்வம், யாருமே கண்டு கொள்ள முடியாத, பாதி உடல் அன்னையாகவும், பாதியுடல் தந்தையாகவும் என்றுமே இவ்வுலகம் இன்பத்தில் திழைக்க அருள்பாலிக்கும் அர்த்த நாரீஸ்வரர் நிலையில் நடமாடிய சாயி தெய்வம் சமாதியுற்றதோ?

எல்லாம்வல்ல இயேசுபிரான் உயிர்த்தெழுந்த உயிர்த்த ஞாயிறே தனக்கும் தக்க ஞாயிறுறென சாயி மாதா சமாதிப் பேறுற்றதோ?

நல்ல தந்தையாகவும் அன்புத் தாயாகவும் எம்மையெல்லாம் மனித வடிவில் நடமாடி முற்றும் திருத்த முடியாத எம்மை ஓரளவேனும் தனது அருளெனும் கொடையை எமக்கருளி இயன்றவரை தன்பால் ஈர்த்த அண்டமெல்லாம் வியாபித்த அருட்தெய்வம் சத்யம் சமாதி உற்றதோ?

கீழிருந்து பார்க்க அண்டங்கள் முழுவதும் அருட்கண்ணில் படவில்லையென்றோ மேலிருந்து நோக்க விருப்பம் கொண்டு, திருவருளை திக்கெல்லாம் சிதறவிட்டு பாபா நின் திருவுடல் சமாதியுற்றதோ?

இறைவனை நம்பாத, இறைவனை அடைய விரும்பாத, இறைவன் ஒருவனே என்ற உண்மையை ஏற்காத, அன்பே இறைவன், இறைவனே அன்பு என்ற உண்மையை உணர முடியாத மாந்தர் எம்மை இம்மனித வடிவில் நின்று திருத்த முடியாதென்றோ சாயி தெய்வம் சமாதியுற்றதோ?

நாம் செய்த, செய்கின்ற பாவங்கள் தெய்வம் போர்த்த மனித திருவுடலை நசுக்கி சத்தியத்தை சமாதியுற வைத்ததோ?

இயேசு, புத்தர், அல்லா வாழ்ந்த காலம் அவர்களை இறைவனாக கண்டு கொள்ளாத மனிதர்கள் இன்று அவர்களை ஒவ்வொரு மதத்தின் பெயர் கொண்டு இவர்தான் பெரிய கடவுள் என்று சமயங்களை வளர்த்துக் கொண்டனர்.

இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தது போல் சர்வமதப் பிரியனாக இயேசு, புத்தர், அல்லா, சிவன் எல்லோரும் இறைவன் தான், ஏன்? நீயும் இறைவன்தான், நானும் இறைவன் தான். ஆனால் உன்னை உன்னால் உணரமுடியாது. ஆத்ம தத்துவத்தைப் புரியாது புலன்பாற் சென்று உடலும், உள்ளமும் ஆணவம் பரவ, ஆசைகள் முற்றி, சுயநலம் படர்ந்து நிற்கும் உன்னை நானறிவது மட்டுமல்லாது என்னையும் அறிந்தவனாகின்றேன். இதனால் என்னை நீ இறைவனாகக் காண்கிறாய் என்கிறார் எல்லாம் வல்ல ஸ்ரீ சத்யசாயி பாபா.

சாயி எனும் மனித உடல் தாங்கிய இறை நடமாடும் வேளை நாம் பெற்ற நல்லருளைவிட, சாயி வழியில் மாறாது நடமாடும் இவ்வுலக மாந்தர் எமக்கு சுவாமியின் பின் தான் மகிமைகள் கிட்டப் போவது நிச்சயம். எல்லாம்வல்ல ஸ்ரீ சத்ய சாயி மாதாவை நம்புங்கள் . துன்பங்கள், துயராங் கள் தோன்றும் வேளையல்ல எந்நேரமும் உன் மனம் எல்லாம் வல்ல சாயி தெய்வத்தை நம்பி சாயி மாதா என்று அலற, உன் வாழ்வு ஒளி நிறைந்ததாக மாறும். நீங்கள் போகும் பாதையை சாயி மாதாவே அமைத்துத் தருவார். நிச்சயம் சத்திய சாயி தெய்வத்தை சத்யமாக நம்புங்கள். இறையருளின் சன்மானம் நிறையவே உண்டு. சாயி நீயே உலகின் புனித சாரதி.

## யாதவன்

### பகவான் போதனை

நீ ஒரு இந்துவா? நல்ல இந்துவாக இரு. நீ ஒரு இஸ்லாமியனா? நல்ல முகமதியனாக இரு. நீ ஒரு கிறிஸ்தவனா? நல்ல கிறிஸ்தவனாக இரு. நீ பிறந்த மதத்தை விட்டு இன்னொரு மதம் சார வேண்டியதில்லை.

முடிந்தால் சாயி சிவனே என்றோ சாயி புத்தா என்றோ, சாயி இயேசு என்றோ வணங்கிக் கொள். நான் என்றும் சர்வமதப் பிரியன்.

*-ஜெய் சாய்ராம்-*

## தமிழ்-சிங்கள புத்தாண்டையொட்டி

## யாழ்ப்பாண மாவட்டத்தில் முதன்முறையாக சிறைக்கைதிகளுக்கான விளையாட்டுப்போட்டி

தமிழ்- சிங்கள புத்தாண்டையொட்டி நேற்று யாழ்ப்பாண சிறைச்சாலைக் கைதி களுக்கிடையில் விளையாட்டுப் போட்டி இடம் பெற்றது.

வடபகுதியைச் பொறுத்தமட்டில் இதுவே சிறைச்சாலை கைதிகளுக்கு இடையில் இடம் பெற்ற முதலாவது விளையாட்டுப் போட்டி யாகும்.

இந்த விளையாட்டுப் போட்டியில் சிறைக்கைதிகள் ஆர்வத்துடன் பங்கு கொண்டிருந்தனர். யாழ்ப்பாண சிறைச்சாலையில் 280 கைதிகள் சிறைவைக்கப் பட்டிருக்கின்றனர். இதில் 35 பெண் கைதி களும் உள்ளடங்குகின்றனர்.

இந்நிகழ்வில் விருந்தினராக யாழ். மாவட்ட நீதிபதி ஏ.பிறேம்சங்கர் , யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ ஆனந்தராசா, சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன், யாழ். சிறைச்சாலை அத் தியட்சகர் சந்தன ஏக்கநாயக்க, நலன்புரிச் சங்கத் தலைவர் வி.சுகிர்தன், யாழ். பொலிஸ் நிலைய தலைமையதிகாரி சமன்சிகேரா, யாழ்.சிறைச்சாலையின் முன்னாள் ஜெயிலர் எம்.இந்திரகுமார் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராசா தெரிவிக்கையில், குற்றங் கள் புரிந்தவர்களுக்கு சட்டம் நிச்சயம் தண்டனை வழங் கும். இதில் எந்த வித மாற்றமும் இல்லை.

குற்றங்களை செய்தபின் சிறைச்சாலைகளில் அடைக்கப்படுவதன் நோக்கம் சமூகத்தில் நல்லவர்களாக உங்களை வாழ வைப்பதே.

ஏதோவொரு குற்றத்தின் பேரில் கைது செய்யப்பட்டே நீங்கள் சிறை வைக்கப்பட் டிருக்கின்றீர்கள். இதனால் உங்களை கைது செய்த பொலிஸார் மீதும் தீர்ப்பு வழங்கிய நீதிபதியின் மீதும் உங்களுக்கு கோபம் ஏற்படும்.

இவ்வாறான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுவதன் காரணம் கோபத்தை மறந்து சமுதாயத்தில் நல்ல மனிதர்களாக உங் களை வாழ வைக்கவே என அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-6)

## பொதுக்கூட்டம்

யாழ். பிரதேச செயலக கலாசார பேரவைப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

மேற்படி கூட்டத்திற்கு யாழ். பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அங்கத் தவர்களை கலந்து கொள்ளுமாறு யாழ். பிரதேச செயலர் திருமதி. சுகுணரதி தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## தந்தை செல்வாவின் அஞ்சலி நிகழ்வும் சர்வமதப் பிரார்த்தனையும்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வநாயகத்தின் 34 ஆவது ஆண்டு நினைவு நாள் அஞ்சலி நிகழ்வும் சர்வமதப்பிரார்த்தனையும் நாளை செவ் வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் அறங்காவற் குழு தலைவர் அருட் கலாநிதி சு.ஜெபநேசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் நினைவுரையை பேராசிரியர் இ.சிவச்சந்திரன் நிகழ்த்தவுள்ளார்.

நன்றியுரையை அறங்காவற்குழு உறுப்பினர் கனகசபாபதி ஆற்றுவார்.

எனவே இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறங்காவற் குழுவினர் அழைப்பு விடுக்கின்றனர்.

(ஸ்ரீ-2)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



என் அன்பிற்குகந்த மாணவச் செல்வங்களே! நான் என்ன செய்யப் போகுகிறேன்?என்னுடைய பணித்திட்டங்கள் என்ன என்பதை உங்களுக்கு விளக்குவதற்காக உங்கள் நடுவே வந்து அமரப் போகிறேன்.என்பணித் திட்டங்களைக் கேட்பீர்களானால், ஏற்பீர்களானால் உங்களோடு நானும் தோளோடு தோள் இணைந்து செயலாற்றக் காத்திருக்கிறேன். என் சொற்களைக்கேட்க மறுத்து,ஒரு வேளை இந்த நாட்டை விட்டே என்னைத் துரத்தி அடித்தாலும் நான்,என் தாய் திருநாட்டிற்குத் திரும்பி வருவேன்.திரும்பி வந்து நம்முடைய பழம்பெரு நாடான தாய் நாடு எனும் கப்பலில் தற்போது தோன்றியுள்ள துணைகளில் பயனாக நாமெல்லாம்மெதுவாக மூழ்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை உங்களிடம் எடுத்துரைப்பேன்.மூழ்குவதாயின் நானும் உங்களோடு சேர்ந்து மூழ்குவேன். நாமெல்லோரும் சேர்ந்தே மூழ்குவோம்.ஆனால் மறந்தும் தாய் நாட்டைப் பழிக்கும் சாபக்கேடுகள் நம்மிடம் எழ வேண்டாம்.


யாழ் குழந்தைகளுக்கு
பெயார்ஸின்
அரவணைப்பு.
நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு பெயார்ஸ்
தயாரிப்பிலிருந்தும் 25 சதம் பெயார்ஸின்
பாதுகாக்கும் கரங்கள் திட்டத்திற்கு செல்கின்றது.
இத்திட்டத்தின் ஓர் அங்கமாக யாழ் போதனா
வைத்தியசாலையின் குழந்தைகள் பிரிவு
புனரமைக்கப்பட்டு ஏப்ரல் மாதம் 28ம் திகதி முதல்
பொதுமக்களுக்காக திறந்துவைக்கப்படவுள்ளது.
Pears®
pure & mild
Pears
காக்கும் கரங்கள்

# மலிங்க வேகத்தில் சரிந்தது டெக்கான்

# மும்பை இந்தியன்ஸ் அசத்தல் வெற்றி




(ஹைதராபாத்)

மலிங்க, ரோகித், சைமண்ட்ஸின் அபார ஆட்டத்தின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியை வெற்றிகொண்டது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் 10 அணிகள் மோதும் 4ஆவது இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது. இதில் ஹைதராபாத்தில் நேற்று நடைபெற்ற 27ஆவது போட்டியில் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் சங்கக்கார தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெக்கான் சார்ஜர்ஸ் அணித்தலைவர் குமார் சங்கக்கார முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணிக்கு ஜேக்கப்ஸ்-டெண்டுல்கர் ஜோடி அதிரடி ஆரம்பத்தை வழங்கியது.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 5.1 ஓவர்களில் 47 ஓட்டங்களைச் சேர்த்தபோது ஜேக்கப்ஸ் 20 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 32 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய ராயுடு பொறுப்பான ஆட்டத்தை வழங்கினார்.

இந்நிலையில் அமித் மிர்ஷா வீசிய 8-வது ஓவரில் சச்சின் டெண்டுல்கர் 24 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 28 ஓட்டங்களுடனும் ராயுடு 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து களமிறங்கிய பொல்லார்ட் பூச்சியத்துடன் வந்த வேகத்திலேயே வெளியேற மும்பை இந்தியன்ஸ் அணி 9.1 ஓவர்களில் 70 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுகளைப் பறிகொடுத்து தடுமாறியது.

இந்நிலையில் 5ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ரோகித் சர்மா - அன்ரூ சைமண்ட்ஸ் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வழங்கி ஆறுதலளித்தனர்.

ஆரம்பத்தில் ஆமை வேகத்தில் ஆடிய இந்த ஜோடி, பின்னர் அதிரடியைத் தொடர மும்பை இந்தியன்ஸ் அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக உயர்ந்தது.

இதில் ரோகித் சர்மா கடைசி ஓவரில் மூன்று சிக்ஸர்கள் விளாசி 33 பந்துகளில் அரைச்சதம் கண்டார்.

இந்நிலையில் மும்பை இந்தி



யன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளையிழந்து 172 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் ரோகித் சர்மா 34 பந்துகளில் (5 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 56 ஓட்டங்களையும் அன்ரூ சைமண்ட்ஸ் 33 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 44 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் குவித்து 5ஆவது விக்கெட்டுக்காக 65 பந்துகளில் 102 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

பந்துவீச்சில் அமித் மிர்ஷா 2 விக்கெட்டுகளையும் பிரஜன் ஓஜா, இஷாந்த் சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 173 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு ஆரம்பத்திலேயே சறுக்கியது.

ஆரம்ப நம்பிக்கை நட்சத்திரம் சொகால் 5 ஓட்டங்களை எடுத்து பொல்லார்ட்டின் சிறப்பான களத்தடுப்பில் மாட்டி ரன்-அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய அணித்தலைவர் குமார் சங்கக்கார, டாவானுடன் இணைந்து சிறப்பாக ஆடினார்.

இதில் டாவான் 22 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 25 ஓட்டங்களை எடுத்து மலிங்கவின் ஜோக்கர் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த கமரூன் வைற் ஒரு ஓட்டத்தை எடுத்த நிலையில் மலிங்கவின் துல்லியமான எறியில் ரன்-அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய சிப்லியும் 6 ஓட்டங்களுடன் பொல்லார்ட்டின் பந்தில் வெளியேறினார். தொடர்ந்து கிறிஸ்டியன் களமிறங்க மறுமுனையில் குமார் சங்கக்கார 28 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 21 ஓட்டங்களுடன் மலிங்கவின் ஜோக்கரில் ஆட்டமிழக்க டெக்கான் சார்ஜர்ஸ் அணி 13.3 ஓவர்களில் 93 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுகளைப் பறிகொடுத்து தத்தளித்தது.

பின்வரிசையில் கிறிஸ்டியன் 21, அமித் மிர்ஷா 25 ஓட்டங்களைத் தமது பங்கிற்கு எடுத்தும் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளையிழந்து 135 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 37 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் அமித் மிர்ஷா ஆட்டமிழக்காமல் 19 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 25 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் லசித் மலிங்க 4 ஓவர்கள் பந்துவீசி 9 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 3 விக்கெட்டுகளையும் முனாப் பட்டேல், பொல்லார்ட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி தான் விளையாடிய 6 போட்டிகளில் 5ஆவது வெற்றியைப் பெற்று 10 புள்ளிகளைப் பதிவு செய்தது.

**நடனம் இல்லை**

சத்ய சாய் பாபா மறைவு காரணமாக நேற்றைய போட்டியில் நடன மங்கைகளின் ஆட்டம் இடம் பெறவில்லை. இதேபோல டிரம்ஸ் இசைக்கவும் அனுமதி மறுக்கப்பட்டது.

# கொச்சி அணியை அடக்கினார் வோர்ன்

(ஜெய்ப்பூர்)

முன்னணித் துடுப்பாட்ட வீரர்களின் சொதப்பலான துடுப்பாட்டத்தின் மூலம் கொச்சி தஸ்கர்ஸ் அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியிடம் தோல்வி கண்டது.

ஐ.பி.எல் தொடரில் ஜெய்ப்பூரில் நேற்று நடைபெற்ற 28 ஆவது போட்டியில் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் ஜெயவர்த்தன தலைமையிலான கொச்சி தஸ்கர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணித்தலைவர் வோர்ன் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதில் கொச்சி தஸ்கர்ஸ் அணியில் மக்குலம் நீக்கப்பட்டு வி.வி.எஸ்.லக்ஸ்மன் இணைக்கப்பட்டார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொச்சி தஸ்கர்ஸ் அணி வோர்ன்-திரிவெடியின் துல்லியமான பந்துவீச்சில் சிக்கி 20 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 109 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பார்த்தீப் பட்டேல் 34 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 32 ஓட்டங்களையும் ஜடேஜா 22, ஜெயவர்த்தன 13 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் ஷேன் வோர்ன் 4 ஓவர்கள் பந்துவீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து 3 விகக்கெட்டுக்களையும் திரிவெடி 4 ஓவர்கள் பந்துவீசி 19 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் அமித் சிங், போத்தா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வோட்ஷன் - டிராவிட்டின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 14.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களையிழந்து 111 ஓட்டங்களைக் குவித்து 8 விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

இதில் ஷேன் வோட்ஷன் 40 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 49 ஓட்டங்களையும் ராகுல் டிராவிட் 37 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 44 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்தவீச்சில் ஜடேஜா ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

இவ்வெற்றியின் மூலம் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தான் விளையாடிய 7 ஆவது போட்டியில் 3 ஆவது வெற்றியைப் பதிவு செய்தது.




## புள்ளிப் பட்டியல்

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிவில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 6 | 5 | 1 | 0 | 0 | 10 | +0.707 |
| ராஜஸ்தான் ரோயல்ஸ் | 7 | 3 | 3 | 0 | 1 | 7 | -0.357 |
| கொல்கத்தா | 6 | 3 | 3 | 0 | 0 | 6 | +0.393 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 5 | 3 | 2 | 0 | 0 | 6 | +0.095 |
| கொச்சி | 6 | 3 | 3 | 0 | 0 | 6 | -0.347 |
| றோயல் சலஞ்ஜர்ஸ் | 6 | 2 | 3 | 0 | 1 | 5 | -0.391 |
| புனே வாரியர்ஸ் | 4 | 2 | 2 | 0 | 0 | 4 | +0.667 |
| சென்னை | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | -0.157 |
| டில்லி | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | -0.231 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 6 | 2 | 4 | 0 | 0 | 4 | +0.251 |

# பாகிஸ்தான் அணிக்கு இலகு வெற்றி

# மேற்கிந்தியத் தீவுகள் துடுப்பாட்டம் மோசம்

(சென்லூசியா)

முதலாவது ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை வீழ்த்தியது.


மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி ஒரே ஒரு இருபது-20 போட்டி, 5 ஒரு நாள் போட்டிகள், 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இதில் ஒரே ஒரு இருபது-20 போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற்றது.

இந்நிலையில் 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது போட்டி நேற்று முன்தினம் சென்லூசியாவில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 221 ஓட்டங்களை எடுத்தது.

இதில் டரன் பிரவோ 109 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 67 ஓட்டங்களையும் எட்



வோட்ஸ் 28, அணித் தலைவர் சமி ஆட்டமிழக்காமல் 29, சிம்மோன்ஸ் 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வகாப் ரியாஷ் 2 விக்கெட்டுக்களையும் மொகமெட் ஹபீஸ், அஜ்மல் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணி சபீக்-மிஸ்பாவின் இணைபிரியா ஆட்டத்தின் மூலம் 41.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 222 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்களால் இலகுவான வெற்றியைப் பெற்றது.

இதில் மிஸ்பா உல் ஹக் 90 பந்துகளில் ( 5பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 73 ஓட்டங்களையும் அசாத் சபீக் 76 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 61ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் 3 ஆவது விக்கெட்டுக்காக 134 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தனர்.

அத்துடன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மொகமட் ஹபீஸ் 54 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் பிஸ்ஷோ 2 விக்கெட்டுக்களைச் சார்ய்த்தார்.

இவ வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்நிலையிலுள்ளது. இப் போட்டியில் சகலதுறையிலும் ஜொலித்த மொகமட் ஹபீஸ் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

# நிபுணர் குழு அறிக்கை விவகாரம்

# இலங்கைக்கு உதவுகிறது இந்தியா

## சிவ்சங்கர் மேனன் தலைமையில் குழு



(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் வழங்கியுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இந்நிபுணர்கள் குழுவின் அறிக்கையை ஆராய்ந்து அவ்வறிக்கை தொடர்பில் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் குறித்து உரிய ஆலோசனை வழங்குமாறு கோரியே இவ்வறிக்கை அரசாங்கத்தால் இந்தியாவிடம் கையளிக்கப் பட்டுள்ளதாக லக்பிம எனும் கொழும்பு ஊடகம் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

இவ்வறிக்கையை ஆராய்ந்து ஆலோசனைகளை வழங்குவதற்காக இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தலைமையிலான குழுவொன்றை இந்தியா நியமித்துள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் இவ்வறிக்கை குறித்து சில தினங்களுக்கு முன்னர் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு கலந்துரையாடியதாகவும் இதனையடுத்தே நிபுணர்கள் குழுவின் அறிக்கை இந்தியாவிடம் கையளிக்கப்பட்டதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நிபுணர்கள்குழுவின்அறிக்கையைஆராயும் இந்திய அதிகாரிகள் குழு தேவைப்படும் தருணத்தில் இந்நெருக்கடியில் இருந்து மீள்வதற்குத்தேவையான உதவிகளையும் ஆலோசனைகளையும் கொழும்புக்கு வழங்கும் எனவும் இராஜதந்திரி ஒருவர் குறிப்பிட்டுள்ளதாக லக்பிம தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் இந்தியா இதுவரை வெளிப்படையாக கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

ஆனால், இந்நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் அரசாங்கத்தின் மீது போர்க்குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதால் வன்னிப் போருக்கு எல்லாவ்வகையிலும் உதவி புரிந்த இந்தியமத்திய அரசுமன்னிப்புக்கேட்க வேண்டுமெனதமிழ்நாட்டில்குரல்கள்ஓங்கிஒலிக்கின்றன.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சுயாதீனமான சர்வதேச விசாரணைகளுக்கு உட்படுத்த இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டுமென அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா வலியுறுத்தியிருந்தார்.

மறுபுறத்தில் இவ்வறிக்கை ஐக்கிய நாடுகள் சபையால் முழுமையாக வெளியிடப்பட்ட பின்னர் மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என தான் நம்புவதாக தமிழக முதலமைச்சர் கருணாநிதியும் தன் பங்கிற்குக் கூறியிருந்தார்.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையைப் பகிரங்கப் படுத்த வேண்டாம் என செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கோரிக்கை விடுத்திருந்தார்.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு பேரவையில் நிபுணர்கள் குழுவின் அறிக்கை விவாதத்திற்கு எடுக்கப்பட்டு கொழும்புக்கெதிராக தீர்மானம் எதுவும் கொண்டுவரப்பட்டால்வீட்டோஅதிகாரம்மூலம் அதை தோற்கடிக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுவருவதாக அரசாங்கம் எச்சரித்துள்ளது.

இந்நிலையில் கொழும்பு சீனாவுக்குச் சார்பான ஒரு நிலைப்பாட்டை எடுப்பதை அறவே விரும்பாத இந்தியா இந்நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் எத்தகைய ஆலோசனைகளை வழங்கும் என்பது அதன் வெளிவிவகாரக் கொள்கையிலேயே தங்கியிருக்கும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ந-5)

## ஐ.நா. அறிக்கைக்கு எதிராக

## 10 லட்சம் விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்துவராம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கைக்கு எதிராக 10 இலட்சம் விவசாயிகளைக் கொழும்பிற்கு அழைத்து வந்து ஆர்ப்பாட்டம் நடத்தும் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் இந்த அறிக்கைக்குப் பின்னால் தமிழீழ விடுதலைப் புலிகள் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் அவமதிக்கும் வகையில் இவ்வாறான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக அறிக்கைக்கு எதிராகக் குரல் எழுப்புவதற்காக விவசாயிகளைக் கொண்டு ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-6)

## நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக நான்கு நாடுகள்

(கொழும்பு)

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான ஐ.நா.நிபுண்ர் குழுவின் அறிக்கைக்கு எதிராக பாதுகாப்புச் சபையின் நான்கு நாடுகள் இலங்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

அவற்றில் வீட்டோ அதிகாரமுள்ள இரண்டு நாடுகளும், தற்காலிக உறுப்புரிமை கொண்ட இரண்டு நாடுகளும் இலங்கைக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளன. ரஷ்யா மற்றும் சீனா ஆகியனவே வீட்டோ அதிகாரம் கொண்ட நாடுகளாகும்.

அத்துடன் இந்தியா மற்றும் போர்த்துக்கல் ஆகிய தற்காலிக உறுப்புரிமை கொண்ட இரண்டு நாடுகளும் இலங்கைக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளன.

பாதுகாப்புச்சபையின் உறுப்புரிமை கொண்ட 15 நாடுகளில் 5 நாடுகள் வீட்டோ அதிகாரம் கொண்டவையாகும். மேலும் 10 நாடுகள் இரண்டுவருட உறுப்புரிமை அடிப்படையில் தற்காலிகமாக சுழற்சி முறையில் இணைத்துக்கொள்ளப்படும் நாடுகளாகும்.

பாதுகாப்புச் சபையில் ஒரு நாட்டுக்கு எதிரான பிரேரணை ஒன்று நிறைவேற சாதாரண பெரும்பான்மை இருந்தாலே போதுமானது. ஆயினும் வீட்டோ அதிகாரம் உள்ள ஒரு நாடாயினும் அதனை எதிர்க்கும் பட்சத்தில் பிரஸ்தாப பிரேரணை செல்லுபடியற்றதாகி விடும்.

அந்தவகையில் ரஷ்யா மற்றும் சீனா ஆகியவற்றின் ஆதரவை நம்பியே அரசாங்கம் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக கடுமையான கருத்துக்களை வெளியிட்டுவருவதாக நம்பப்படுகின்றது. (ந-5)

## மரண அறிவித்தல்

### இராசு பரஞ்சோதி

கோப்பாய் தெற்கு பழைய வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசாத்தி என்று அழைக்கப்படும் இராசு பரஞ்சோதி 24.04.2011 (நேற்று) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசுவின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற முருகேசு கந்தையாவின் அன்புச் சகோதரியும், தேவராஜா (இளைப்பாறிய புகையிரத திணைக்கள ஊழியர்), சந்திராதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுப்பிரமணியம், விமலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கல்பனா, கலைச்செல்வி, றாஜ்மோகன், கிருஷாந்தி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகன கிரியைகளுக்காக கோப்பாய் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
இ.தேவராஜா
(மகன்)

(C-3065)

## பீரிஸ் நடத்திய சந்தி...

அளிக்கும் நோக்கில் இச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இச் சந்திப்பில் இலங்கைக்கான வெளி நாட்டுத்தூதுவர்கள் அனைவரும் கலந்து கொண்டிருந்த போதிலும் சீனத்தூதுவர் ஜங் சுப்பிங் மட்டும் கலந்துகொள்ளவில்லை. அத்துடன் இச்சந்திப்பில் கலந்துகொள்ளாதற்கான காரணத்தை அவர் இதுவரை கூறவில்லை.

இச்சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு இலங்கைக்கான சீனத்தூதுவர் ஜங் சுப்பிங்குக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் இவ் அழைப்பு கிடைத்ததை அவர் தொலைபேசி வாயிலாக உறுதிப்படுத்தியிருந்ததாகவும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இவ் விவகாரம் வெளிவிவகார அமைச்சுக்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் இச் சந்திப்பில் சீனத்தூதுவர் கலந்து கொள்ளாததற்கான பின்னணி குறித்து கொழும்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (ந-5)

## நிபுணர்கள் குழுவின்...

குறித்த தகவல்கள் மற்றும் விளக்கங்களை கொண்டதாக இருக்கும் என கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலுக்கு எதிராக போர்க் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்ட போது அந்நாட்டு அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கெதிராக இலங்கையின் சட்ட நிபுணர்கள் குழு தயாரிக்கும் இவ் அறிக்கை அமைந்திருக்கும் என இவ் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன. (ந-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.